RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 10 • இதழ் 11 • மே 2026 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ்
VENMAI

## எண்ணங்கள்




RAMRAJ
PURE COTTON
WHITE
SHIRTS

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

இரக்கமுள்ள இதயத்துடன் இனிதே எல்லாம் செய்து
மறக்க முடியாத நினைவுகளை எல்லோருக்கும் தந்து
அறமுள்ள அன்பு வாழ்க்கை வாழ வழிகள் சொல்லும்



# கனிவு

## சிறப்பிதழ்

என்ற இந்த இனிய நூலை வழங்குவதில் பெருமிதம்
கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

கனிவு என்பது ஒரு சொல் அல்ல. அது அழகும் ஆழமும் அன்பும் நிறைந்த எளிமையான செயல். அதனால்தான் ‘கனிவுக்கு எதுவும் செலவாகாது’ என்று கிராமத்துப் பெரியவர்கள் சொல்வார்கள். இந்த வாழ்வின் மீதான நம்பிக்கையை மீண்டும் பெறுவதற்கு, ஆறுதல் தேவைப்படுகிறவர்களுக்கு, செய்யும் வேலையை ஒருவர் இன்னும் உற்சாகமாகச் செய்வதற்கு, கனிவு நிறைந்த நமது ஒரு தொடுதலோ, பார்வையோ, வார்த்தையோ போதுமானது. மிகப்பெரிய பலன் தரக்கூடிய மிக மிக எளிய செயல் கனிவு.

ஆனால், கனிவுமிக்கவர்களாக நாம் இருக்க வேண்டுமெனில், நேர்மறையாகச் சிந்திப்பவர்களாக இருக்க வேண்டும். கனிவு என்பது உள்ளத்தின் அருள். உள்ளார்ந்த அன்பின் வெளிப்பாடு. வாழ்வு முழுமையடையவும், உறவுகளை மேம்படுத்தவும், சமூகமாக ஒன்றிணையவும் கனிவுடன் நடந்துகொள்வது அவசியம்.

சிறுவயதில் கேட்ட கதை நினைவுக்கு வருகிறது. எறும்பு ஒன்று தண்ணீரில் தவறி விழுந்து தத்தளித்தது. இதைக் கவனித்த ஒரு புறா, தன் அலகால் ஒரு இலையை எடுத்து எறும்புக்கு அருகில் போட்டது. உயிர் பிழைக்க இறுதி வாய்ப்புக்காக ஏங்கித் தத்தளித்த எறும்புக்கு புறாவின் கனிவு மிகுந்த செயல் மறுவாழ்வு அளித்தது. அலகால் இலையை எடுத்துப் போடும் செயலால் புறாவுக்கு என்றும் இழப்பும் இல்லை. அதற்கு எறும்பு நட்பாகவோ, உறவாகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த உதவியைச் செய்வதால் பதிலுக்கு எறும்பு தனக்கு என்ன செய்யும் என்கிற எதிர்பார்ப்பும் புறாவுக்கு இல்லை. மிகச்சாதாரணமாக நிகழ்ந்த ஒரு செயல் அப்போது எறும்பின் உயிரைக் காப்பாற்றியது.

விதைத்து முளைக்காமல் போகாது. அதிலும் நல்ல எண்ணங்களை, நல்ல செயல்களை விதைத்தால், அவை செழித்து வளரும். சிறிது நேரத்தில் அடுத்த சம்பவம். எறும்பின் உயிரைக் காப்பாற்றிய அந்தப் புறாவை வேடனின் அம்பு ஒன்று குறிவைத்துக் காத்திருக்கிறது. தன் கழுத்து இன்னும் சில நொடிகளில் அந்த வேடனின் அம்பால் தனியாகத் துண்டிக்கப்படும் என்பதை அறியாமல் மரத்தில் அமர்ந்திருக்கிறது புறா. இதைக் கவனித்த எறும்பு துரிதமாகச் செயல்படுகிறது. வேடன் அம்பு எய்தும் தருணத்தில் அவன் காலைக் கடிக்கிறது. வலியில் துடித்து, சிறு கவனப்பிசகால் வேடனின் அம்பு குறிதவறிப் போக, சுதாரித்த புறா தப்பித்துப் பறந்து போனதாக நாம் கதை படித்திருப்போம்.

குழந்தைகளிடம் கனிவின் அவசியத்தை விளக்க, அதன் பலனை மனத்தில் பதியவைக்க நம் முன்னோர்களால் சொல்லப்பட்ட கதை இது. நாம் செய்த ஒரு நல்ல செயலின் பலன் பல மடங்காக நமக்குத் திரும்பக் கிடைக்கும் என்பதைக் குழந்தைகளுக்கு உணர்த்தும் இந்தக் கதை எந்தக் காலத்திலும் பெரியவர்களுக்கும் பொருத்தமானது.

தனிமனிதர்களின் வாழ்வில் கனிவு மிகுந்த செயல்கள் பெரிய மாற்றங்களை உருவாக்கியுள்ளன. அமெரிக்காவில் புகழ்பெற்ற ‘ராக்’ (Random Acts of Kindness) எனும் அமைப்பு, சிறுசிறு கனிவு தரும்



செயல்களால் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை ஆவணப்படுத்தி வருகிறது. மாணவர்களிடம் ஆசிரியர்கள் கனிவுடன் நடந்துகொண்டால், அதன் தாக்கம் மாணவர்களின் வாழ்நாள் முழுவதும் தொடர்வதாகப் பல ஆய்வுகள் கூறுகின்றன. இளம்வயதில் குழந்தைகள் தங்களின் ஆசிரியர்களைப் பார்த்தே கற்றுக்கொள்கிறார்கள்.

ஒரு முதிய பெண்மணி கனமான இரண்டு பைகளைத் தூக்க முடியாமல் தூக்கியபடி நடந்து சென்றபோது, பத்து வயது சிறுவன் ஓடிப்போய் அதில் ஒரு பையைக் கேட்டு வாங்கி அவருடன் தூக்கிக்கொண்டு நடந்தான். இந்த நிகழ்வை ஆய்வு செய்தபோது, அவன் தன்னுடைய ஆசிரியரைப் பார்த்து அத்தகைய உதவிகளைச் செய்ததாக அறிந்தனர். அதன்பிறகு அந்த ஆசிரியரிடம் பல வருடங்களுக்கு முன்பு படித்த சில மாணவர்களைச் சந்தித்தபோது, அவர்களின் வாழ்விலும் கனிவு மிகுந்த செயல்கள் அதிகம் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களின் குடும்பங்களில் மகிழ்ச்சி நிலவுகிறது. பணியிடத்தில் நல்ல பெயரும் இருக்கிறது. சிறுவயதில் மனதில் விதைக்கப்படும் கனிவு, ஒருவரை முழுமை நிறைந்த மனிதராக உருவாக்குகிறது என்பதைப் பல நிஜ உதாரணங்களுடன் அந்த ஆய்வில் கண்டறிந்தனர்.

ஒரு மனிதனின் மனதில் மிகுந்திருக்கும் கனிவு, தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப உறவுகளிடமும், சமூகத்திலும் நல்ல விளைவுகளைத் தருகிறது என்பது அறிவியல்பூர்வமான ஆய்வுகள் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. 2024–ம் ஆண்டு ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் நடந்த ஆய்வில், தினமும் ஒரு கனிவு நிறைந்த செயலைச் செய்பவருக்கு மன அழுத்தம் குறைவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவருக்குள் தனிமை உணர்வு குறைந்து, சமூக உறவுகள் வலுவடைகின்றன. கனிவு, நம் மூளையில் செரடோனின், டோபமைன் ஆகிய ஹார்மோன்களை அதிகம் சுரக்கச் செய்து, நம் மனமகிழ்ச்சியை அதிகரிக்கிறது. கனிவு இல்லாமல் இறுக்கமாக இருப்பவர்களிடம் பதற்றமும் தனிமை உணர்வும் மன அழுத்தமும் அதிகரிக்கிறது. சமூகத்தில் கனிவு இல்லாத தன்மை உயர்ந்தால், எதிர்மறை எண்ணங்கள் மேலோங்கி வன்முறை குணம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரிடமும் அதிகமாகிவிடுகிறது.

இங்கிலாந்தில் கடந்த 2023–ம் ஆண்டில் மனச்சோர்வு அல்லது பதற்ற அறிகுறிகள் உள்ளவர்களை மூன்றுகுழுக்களாகப்பிரித்து ஆய்வு செய்தனர். அவர்களில் ஒரு குழுவினரைக் கனிவு மிகுந்த மனிதர்களோடு பழக வைத்தனர். நேர்மறை எண்ணங்கள் உள்ளவர்களின் பழக்கம்,



The Culturepreneur



பதற்ற உணர்வுள்ளவர்களின் உள்ளத்தில் பாதுகாப்பு உணர்வை அதிகரிக்கச் செய்திருக்கிறது. தனிமையில் ஒதுங்கி இருந்தவர்கள் குழுவாக இயங்க ஆரம்பித்தனர். பிறருக்கு உதவி செய்ய முடிவதில் நம்பிக்கையையும் பெற்றனர். உறவுகளை வலுவாக்கி அதன்மூலம் தங்களின் மனச்சோர்வினை அவர்கள் குறைக்க முடிந்தது. முதலில் மற்றவர்களின் கனிவு மிகுந்த செயல்களால் பலன் பெற்றவர்கள், பிறகு தங்களின் கனிவுமிகுந்த செயல்களால் பிறருக்கு உதவும் நிலையை அடைந்தனர். இதை ‘பாசிட்டிவ் லூப்’ என்று அழைக்கின்றனர். ஒரு நற்செயல் நிகழ்வதன் மூலம், அதைப் பெறுபவர்கள் அதன்பின் கொடுப்பவர்களாக வலிமை பெறுவதை அந்த ஆய்வு நிரூபித்தது. ஒரு சங்கிலித்தொடர் போல அன்பு பரவிக்கொண்டே இருக்கிறது.

கனிவு எனும் குணம், தனிமனிதர்களின் சுயநலத்தைக் குறைத்துப் பிறர் துயரை உணரவும் மாற்றவும் துணைபுரிகிறது. அதனால் கனிவுடன் நடந்துகொள்வதைக் குழந்தைகளிடம் பழக்கமாக வளர்க்க வேண்டும். தனக்கு என்ன கிடைக்கும் என எதிர்பார்த்தே எல்லாவற்றிலும் செயல்படும் தன்மை அதிகரிக்கும் இந்தக் காலகட்டத்தில், கனிவு நிறைந்த செயல்களைப் போற்றுவதும் அதிகரிப்பதும் அவசியம். அறிவையும் திறமையையும் நம் அடுத்த தலைமுறையிடம் வளர்ப்பது போல, மனிதநேயத்தை வெளிப்படுத்த வலிமையான சக்தியாக விளங்கும் கனிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு நாளில் நாம் செய்கிற சின்னச் சின்ன அன்பு மிகுந்த, கனிவு நிறைந்த செயல்கள் அந்த நாளையே அழகானதாக மாற்றும். அதை தினம்தினம் செய்கிறபோது வாழ்வே அழகானதாக, அர்த்தமுள்ளதாக மாறும். குறையொன்றும் இல்லாத நிறைவாழ்வு அமையும்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**



# கனிவு காட்டும் கனல்!

இளம்வயதிலேயே எதிர்பாராத விபத்து ஒன்றில் கணவரை இழந்திருந்தார் கவிதா. அந்த அதிர்ச்சியும் துக்கமும் அவரை வீட்டுக்குள் முடக்கிவிட்டது. இருவரின் பெற்றோருக்குமே கவிதாவுடன் வந்து நிரந்தரமாகத் தங்கமுடியாத அளவுக்குப் பணிகள் இருந்தன. கவிதாவும் பணியில் இருந்ததால், அவர்களில் யாருடனும் ஊருக்குப் போய் நிரந்தரமாகத் தங்கிவிட முடியவில்லை. தன் அம்மா வீட்டுக்கு இரண்டு வாரங்கள் மட்டும் போய் இருந்துவிட்டுத் திரும்பிவந்திருந்தார்.

நகரத்தில் அப்பார்ட்மென்ட் வீடு ஒன்றில் வசித்துவந்தார் கவிதா. கணவர் இறந்து இரண்டு வாரங்களுக்குப் பிறகு வழக்கம் போல வேலைக்குப் போக ஆரம்பித்துவிட்டாலும், மாலையில் வேலை முடிந்து வந்து நான்கு சுவர்களுக்குள் ஒவ்வொரு நிமிடத்தையும் நகர்த்துவது அவருக்கு நரக வேதனையாக இருந்தது. எதிலுமே அவர் கவனம் செல்லவில்லை. தன் நிலையை நினைத்து விம்மி வெடித்து அழுதபோது காலிங் பெல் அடித்தது. கண்களைத் துடைத்துக்கொண்டுபோய்கதவைத் திறந்தால், எதிர்வீட்டுப் பெண் நின்றிருந்தார். “அளவு தெரியாம கொஞ்சம் அதிகமா சப்பாத்தி, பூரி எல்லாம் செய்துட்டேன். எங்க வீட்டுல வந்து சாப்பிடறீங்களா?” என்று கவிதாவைக் கூப்பிட்டார்.

‘சாப்பிடும் மனநிலையில் இல்லை’ என்று கவிதா தவிர்க்கப் பார்த்தாலும், அவர் விடுவதாக இல்லை. கிட்டத்தட்ட கையைப் பிடித்து இழுத்துப் போகாத குறையாகக் கவிதாவைத் தன் வீட்டுக்குக் கூட்டிப் போனார். அங்கே போனால், இன்னும் நான்கு பெண்கள் இருந்தனர். எல்லோருமே அதே தளத்தில் உள்ள வீடுகளில் வசிப்பவர்கள். “உங்களுக்காத்தான் வெயிட் பண்றோம், வாங்க சாப்பிடலாம்” என்று அவர்களும் இணைந்துகொண்டனர். எதிர்வீட்டுப் பெண்மணியின் குழந்தைகளுடன் இன்னும் சில குழந்தைகளும் அங்கு விளையாடிக் கொண்டிருந்தன. அவர்களின் சேட்டையில் மனம் லேசாகிக் கவிதா சாப்பிட ஆரம்பித்தார்.

அந்த நான்கு பெண்களும் தங்களைக் கவிதாவிடம் அறிமுகப்படுத்திக்கொண்டனர். ஆறுதல் வார்த்தைகள் எதுவும் சொல்லிக் கண்ணீரை வரவழைக்காமல் மிகவும் கவனமாகப் பொதுவான விஷயங்களையே பேசினர். தன் மனத்துயரைக் குறைப்பதற்காக, எதிர்வீட்டுப் பெண் திட்டமிட்டே உணவு தயாரித்திருந்தார் என்பது கவிதாவுக்குப் புரிந்தது. இரவு நீண்ட நேரம் எல்லோரும் பேசிக்கொண்டு இருந்தனர். ‘‘எதைப் பற்றியும் கவலைப்படாம போய்த் தூங்கு, நாங்க இருக்கோம்’’ என்று கவிதாவின் கரம் பற்றிச் சொன்னார் எதிர்வீட்டுப் பெண். அந்த ஆறுதல் அந்த நேரத்தில் கவிதாவுக்குத் தேவையாக இருந்தது.

அடுத்த நாள் காலையிலேயே அந்த நான்கு பெண்களில் ஒருவர் வந்தார். தன் வீட்டுப் பணிப்பெண்ணைக் கூடவே அழைத்து வந்திருந்தார். ‘‘கொஞ்ச நாளைக்கு இவங்க உங்களுக்கு ஆபீஸ் கிளம்பறவரைக்கும் காலை நேரத்துல உதவியா இருப்பாங்க. வேலை குறைவா இருந்தாலும், பேச்சுத்துணையா இருக்கும்’’ என்று சொல்லி விட்டுவிட்டுப் போனார். வாய் ஓயாமல் நகைச்சுவையாகப் பேசும் அந்தப் பணிப்பெண் கூடவே இருந்ததில், கவிதா மனபாரம் இல்லாமல் தயாராகி வேலைக்குக் கிளம்பிப் போனார். மாலையில் கவிதா வீடு திரும்பியதுமே இன்னொரு பெண்மணி காபி போட்டு எடுத்துக்கொண்டு தன் குழந்தைகளுடன் வந்துவிட்டார். அந்தக் குழந்தைகளின் விளையாட்டும், அந்தப் பெண்மணியின் உரையாடலும் கவிதாவின் தனிமை உணர்வைத் துரத்தின. சரியாக இரவு உணவு நேரத்தில் எதிர்வீட்டுப் பெண் வந்து எல்லோரையும் கூப்பிட்டுப் போனார். இரவு தூங்கும் நேரம் தவிர்த்து எப்போதும் கவிதா தனியாக இல்லை. ஐந்து பெண்களும் பேசி வைத்துக்கொண்டு இதைத் தினம் தினம் செய்வது கவிதாவுக்குப் புரிந்தது.

அந்த வார இறுதியில் கவிதாவின் அம்மா ரயில் ஏறிவந்து தன் மகளின் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டார். “இந்த நேரத்தில் என்னால் உன்னோடு இருக்க முடியவில்லையே” என்று பரிதவித்தார். கவிதா அவரைக் கூட்டிப் போய் அந்த ஐந்து பெண்களையும் அறிமுகம் செய்துவைத்தார். “நீ கவலைப்படாதேம்மா! எனக்கு இங்கே ஐந்து அம்மாக்கள் இருக்காங்க. இவங்க காட்டற அன்பில் நான் உன்னையே மறந்துடுவேன் போலிருக்கு” என்றார்.

பிறரிடம் கனிவு காட்டுவது உங்களை மிகச்சிறந்த மனிதராக மாற்றுகிறது. உங்கள் மனத்தை விசாலமாக்கி, உங்களை இன்னும் பொறுமையும் அக்கறையும் கொண்டவராக ஆக்குகிறது. முகம் தெரியாத மனிதர்களிடம்கூடக் கனிவு காட்டும் குணம் உள்ளவர்கள், இந்த உலகை அழகானதாக மாற்றுகிறார்கள். தங்களைச் சுற்றியும் நேர்மறைச் சக்தியைப் பரவவிடுகிறார்கள். தினசரி வாழ்க்கையில் கனிவு காட்டி உயர்வதற்கு என்ன வழி?

- அடுத்தவர்களிடம் கனிவாக நடப்பதற்கு முன்பாக உங்களிடம் நீங்கள் கனிவு காட்டுங்கள். குடும்பத்தினர், உறவுகள் மற்றும் நண்பர்களிடம் எப்படி அக்கறை செலுத்துவீர்களோ, அதே அளவு அக்கறையை உங்கள்மீதும் செலுத்துங்கள். உங்கள் உடல்நலம் மற்றும் மனநலனில் கவனம் காட்டுங்கள். உங்கள் மனத்தில் உற்சாகம் நிரம்பி வழிந்தால்தான், அடுத்தவர்கள்மீது கனிவு பிறக்கும்.
- ‘நமக்குத் தேவையான எல்லாமே நம்மிடம் இருக்கின்றன’ என்ற நிறைவு கிடைக்கும்போதுதான் உங்களால் அடுத்தவர்களிடம் கனிவு காட்ட முடியும். இருப்பதில் நிறைவு கொள்ளுங்கள்.
- சூழலை வைத்தோ, செயல்களை வைத்தோ எவரையும் பற்றி எந்த முடிவையும் எடுக்காதீர்கள். தினமும் நன்றாகப் பேசும் நண்பர் இன்று உங்களைக் கவனிக்காமல் போகிறார் என்றால், அவருக்குத் திமிர் என நினைக்காதீர்கள். அவர் பெரும் மனப்போராட்டத்தில் இருக்கலாம். அல்லது நிஜமாகவே உங்களைக் கவனிக்க முடியாத அளவுக்கு ஏதோ குழப்பத்தில் சிக்கியிருக்கலாம். எப்போதும் இப்படியே நினையுங்கள்.



- வாழ்க்கையில் சின்னச்சின்ன முடிவுகள் எடுக்கும்போதுகூட அடுத்தவர்களிடம் பாரபட்சம் காட்டாதீர்கள். பணம், அந்தஸ்து, இனம், பின்னணி என்று எதை வைத்தும் எவரிடமும் பாகுபாடு காட்டாதீர்கள். எல்லா உயிர்களும் சமம் என்ற நினைப்பிலிருந்தே கனிவு பிறக்கிறது.
- உங்களை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என ஆசைப்படுகிறீர்களோ, அப்படி மற்றவர்களையும் நீங்கள் நடத்துங்கள். அன்பும் மரியாதையும் கொடுப்பவர்களுக்கே, அதைவிடப் பல மடங்கு அவை திரும்பக் கிடைக்கும். அடுத்தவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை அவர்கள் வாய்திறந்து கேட்பதற்கும் முன்பாகவே செய்யும் மனம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் கனிவின் பிறப்பிடம்.
- தினமும் காலை முதல், இரவு வரை நீங்கள் எதிர்கொள்ளும் எவருக்கும் சின்னச்சின்ன உதவிகளைச் செய்தபடி இருங்கள். அதன்மூலம் நீங்கள் அவர்களையும் கனிவானவர்களாக மாற்றுகிறீர்கள். எங்கெங்கும் அன்பின் வெளிச்சத்தையும் பரவவிடுகிறீர்கள். ●



# வளம் தரும் வாழ்க்கைப் பாடங்கள்!

- ‘இதை ஒருநாள் செய்வோம்’ என்று நினைப்பதா, ‘இந்த நாளில் செய்வோம்’ என்று செயலில் இறங்குவதா, முடிவு நம்முடையது!
- எந்தக் கனவையும், அது நிஜமாகும் வரை திரும்பத் திரும்பக் கண்டுகொண்டே இருங்கள்.
- சில மோசமான மனிதர்களுக்குப் பதில் சொல்லாமல் அமைதியாக இருப்பதும் மிகச்சிறந்த முடிவுதான்.
- நம்பிக்கை வையுங்கள், எதுவும் தானாக மடியில் வந்து விழும் என்று எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் முயற்சி செய்தால்தான் அது கனியும்.
- தற்காலிக உணர்வுகளால் உந்தப்பட்டு நிரந்தர முடிவுகளை எடுக்காதீர்கள்.
- இன்று ஒரு மோசமான நாளாக அமையலாம். ஆனால், நாளை நல்ல நாள் என்று நம்புங்கள். சூரிய அஸ்தமனமும் அழகு, உதயமும் அழகு!
- எல்லாப் புயல்களும் வாழ்வைப் புரட்டிப் போட வருவதில்லை. சில புயல்கள் உங்களுக்குப் பாதையை உருவாக்கிக்கொடுக்கவும் கூடும்.

# இன்னொரு தாயின் மகன்!

ரமேஷ் பதற்றமாகத் தன் நண்பன் ரவிக்கு போன் செய்தான். “டேய், அம்மாவுக்கு திடீர்னு உடம்பு சரியில்லாமப் போச்சு. டாக்டர்கிட்ட காண்பிச்சு இப்போதான் வீட்டுல கொண்டுபோய் விட்டுட்டு ஆபீஸ் வந்தேன். மாசக் கடைசி. கையில இருந்த பணம் எல்லாம் ஹாஸ்பிட்டல்ல செலவாகிடுச்சு. மருந்து வாங்க பணமில்ல. அம்மாவை நினைச்சா பயமா இருக்குடா” என்றான்.

“சரிடா, நான் பாக்கறேன். இப்ப கொஞ்சம் வேலையா இருக்கேன். அப்புறமா கூப்பிடறேன்” என்று சொல்லிவிட்டு அவசரமாக வைத்தான் ரவி. அவன் ஆய்வுக்கூடம் ஒன்றில் வேலை பார்க்கிறான். அங்கு உள்ளே இருக்கும்போது போனை ஆஃப் செய்து வைக்க வேண்டும். டீ சாப்பிட வெளியில் வந்தபோது ரமேஷ் அழைத்ததால்தான் அவனால் பேச முடிந்தது.

அதன்பிறகு அன்று பலமுறை ரமேஷ் முயற்சி செய்தான். ரவியின் போன் சுவிட்ச் ஆஃப் ஆகியிருந்தது. அவசர நேரத்தில்கூட இவன் உதவி செய்யவில்லையே என்று விரக்தியாக ரமேஷ் மாலை வீடு திரும்பினான். உள்ளே போனால், அம்மாவின் படுக்கை பக்கத்தில் மருந்து கவர் இருந்தது. “ரவி காலையிலேயே வந்து மருந்துச்சீட்டை வாங்கிப் போய் மருந்து வாங்கிவந்து கொடுத்தான்” என்றார் அம்மா.

இன்னொரு தாயின் மகனாகப் பிறந்த தன் சகோதரனைச் சந்தேகப்பட்டோமே என்று ரமேஷ் தன் மனதுக்குள் மன்னிப்புக் கேட்டான்.



# ஒப்பீடு ஏன்?

ஓட்டப்பந்தயம் ஒன்றில் 10 கிலோ மீட்டர் தூரத்தைக் கடப்பதற்குப் பாலு ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டார், ஆகாஷ் ஒன்றரை மணி நேரம் எடுத்துக் கொண்டார். 'இவர்களில் யார் திறமைசாலி?' என்று கேட்டால் 'பாலு' என்பீர்கள். ஆனால், பாலு அருமையான மைதானத்தில் ஓடினார், ஆகாஷ் கரடுமுரடான பாதையில் ஓடினார் என்று தெரிந்தால், உங்களுடைய பதில் மாறும். 'ஆகாஷ்தான் திறமைசாலி' என்பீர்கள். பாலுவுக்கு 50 வயது என்றும் ஆகாஷுக்கு 25 வயது என்றும் கூடுதல் தகவல் தெரிந்தால், 'பாலுதான் திறமைசாலி' என்பீர்கள். இப்படி அதிகத் தகவல்கள் கிடைக்கக் கிடைக்க முடிவுகள் மாறிக்கொண்டே இருக்கும்.

வாழ்க்கையில் பல தருணங்களில் வேகமாகவும் அவசரமாகவும் ஒப்பிட்டுப் பார்த்துப் பல தவறான முடிவுகள் எடுக்கிறோம். ஒவ்வொருவரின் சூழலும், அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளும் வேறுபட்டதாகும். எனவே, உங்களை யாருடனும் ஒப்பிட வேண்டாம்!






# உயர்வாக இருங்கள்!

ஒரு ஹோட்டலில் சாதாரண மரப்பெட்டியில் சிறிய பேப்பர் நாப்கின்களை அடுக்கி வைத்தார்கள். சாப்பிட்டுவிட்டு வந்தவர்கள், ஆளுக்கு இரண்டு மூன்றாய் எடுத்து கைகளையும் வாயையும் துடைத்து அவற்றை வீணாக்கிப் போட்டார்கள். அடுத்த நாள் வெள்ளிப் பெட்டி ஒன்றில் நாப்கின்களை அடுக்கி வைத்தார்கள். சாதாரண பேப்பர் நாப்கின்களைவிடச் சற்றே பெரிதாகவும் அழகாகவும் அவை இருந்தன. பார்த்தாலே விலை உயர்ந்தவை போலத் தெரிந்தன. அதனால் அவற்றை மக்கள் கவனமாகப் பயன்படுத்தினர். ஒன்றுக்கு மேல் யாரும் எடுக்கவில்லை.

உயர்வானதாகத் தெரியும் பொருளை மக்கள் கவனமாகக் கையாள்வார்கள். உயர்வான மனிதர்களுக்கும் இதே கவனம் கிடைக்கும். எனவே, உயர்வானவராக இருங்கள்!

# கனிவாக இருப்பதே முதிர்ச்சி!

பள்ளி முடித்து நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்று கல்லூரிக்குள் நுழைந்த பிறகு விஷால் ரொம்பவே மாறிவிட்டான். கல்லூரியில் தேவையில்லாத சண்டைகள் போட்டான். வீட்டிலும் எல்லோரிடமும் எரிந்து விழுந்தான். குறிப்பாக அவன் தங்கை சாதனாவை வம்புக்கு இழுத்துக்கொண்டே இருப்பான்.

பெற்றோர் கவலைப்பட்டார்களே தவிர, அவனைத் திட்டவோ, கண்டிக்கவோ இல்லை. சாதனா பொறுக்க முடியாமல் அப்பாவிடம் போய்க் கத்தினாள். "ஒழுங்கா அடங்கி இருன்னு அவனைக் கண்டிக்கலாம் இல்லையா! அவன் இப்படித்தான் இருப்பேன்னு சொன்னா, அவனைத் திட்டி வீட்டுல இருந்து துரத்துங்க" என்றாள்.

அப்பா அவளை அமைதியாக்கிவிட்டுச் சொன்னார். "இவ்வளவு நாள் குழந்தையா இருந்துட்டு டீன் ஏஜ் வயதைத் தொட்டதும் பலருக்கும் இயல்பா வர்ற எரிச்சல்தான் இது. 'நாம நினைக்கற மாதிரி நம்மால இருக்க முடியலையே'ங்கற ஏக்கத்துல வர்ற விரக்தி. அவன் நம்மைக் கஷ்டப்படுத்தறதா நினைக்கிறோம். ஆனால், அவன் மனசுக்குள்ள இதைவிட நிறைய கஷ்டங்கள் இருக்கும். குழப்பமான இந்த நாட்கள்ல நாம அவனுக்கு ஆறுதலா இருக்கணும். அப்பாவோ, அம்மாவோ ஏதாவது காயப்படுத்தற மாதிரிச் சொல்லிட்டா, குழந்தைங்க மறக்க மாட்டாங்க. சீக்கிரமே அவங்க மாறிடுவாங்க. ஆனா, அந்தக் காயம் ஆறாது" என்றார்.

அப்பாவின் அந்த முதிர்ச்சி அவளுக்கு ஆச்சர்யம் தந்தது. அப்பா சொன்னது போலவே விஷால் சீக்கிரமே அமைதியான, அக்கறையான மனிதனாக மாறினான். சாதனாவிடம் மீண்டும் அன்பு காட்டினான். கல்லூரியில் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றான். பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் மதிப்பான வேலையிலும் சேர்ந்தான். சொந்த அண்ணனையே எதிரி போல நினைத்தோமே என சாதனா வெட்கப்பட்டாள்.

# அவர்களின் கண்களால் பாருங்கள்!



ஒரு சாஃப்ட்வேர் அலுவலகத்தில் விளையாட்டுக்குத் தனியாக அறை ஒன்று உண்டு. ஒருநாள் இரண்டு இளம் கம்ப்யூட்டர் எஞ்சினியர்கள் அமர்ந்து செஸ் விளையாடிக்கொண்டிருந்தபோது திடீரென உள்ளே நுழைந்தார் தலைமை நிர்வாகி. அவர்கள் பதறிப்போய் எழ, உட்கார்ந்து விளையாடுமாறு சொன்னார் நிர்வாகி. “உங்களில் யார் ஜெயிக்கிறீங்களோ, அவரோட நான் அடுத்த கேம் விளையாடறேன்” என்றார்.

அதேபோல அடுத்த ஆட்டத்தில் விளையாடிய நிர்வாகி, வெறும் ஆறேழு நகர்த்தல்களில் ஆட்டத்தை ஜெயித்துவிட்டார். “இவ்வளவு பிரமாதமா விளையாடறீங்களே, தினமும் ஆடுவீங்களா சார்?” என்று கேட்டான் தோற்றவன். “இல்லை, வருஷத்துக்கு ரெண்டு, மூனு கேம் விளையாடினா அதிகம். நேரம் கிடைக்கறது இல்லை” என்றார் நிர்வாகி. தோற்றவன் வியந்து, “அப்புறம் எப்படி சார் இவ்ளோ பிரமாதமா விளையாடறீங்க?'' என்றான்.

“என் உறவுக்காரர் பெரிய செஸ் வீரர், அவர் ஒரு விஷயம் சொல்லிக்கொடுத்தார். ‘ஒவ்வொரு முறையும் எதிராளி ஒரு காயை நகர்த்தும்போது கவனி. அவர் ஏன் அதை நகர்த்தினார், அதன்மூலம் என்ன செய்ய நினைக்கிறார், அவர் என்ன திட்டம் வைத்திருக்கிறார் என்று யோசி. ஆட்டத்தை அவரின் கண்களால் அணுகினால் நீ ஜெயித்துவிடலாம்’ என்றார். அதைத்தான் நான் பின்பற்றுகிறேன்.

இது செஸ்ஸில் மட்டுமில்லை. பிசினஸ் பேச்சுவார்த்தை, உறவினருடன் உரையாடல், ஒரு பிரச்னைக்குத் தீர்வு தேடும் யோசனை என்று எல்லா இடங்களிலும் பயன்படுகிறது. பெரும்பாலும் என்னை ஜெயிக்க வைக்கிறது” என்றார் நிர்வாகி.

அந்த இளைஞன் ஒரு புதிய பாடத்தை அன்று கற்றான். இதேபோல இன்னொரு இளைஞன் கற்ற பாடமும் முக்கியமானது. கல்லூரியில் இறுதியாண்டு படித்த அவன், தன் நண்பர்கள் பட்டாளத்துடன் சென்று கேன்டீனில் சாப்பிடுவான். வசதியான குடும்பங்களைச் சேர்ந்த அவன் நண்பர்கள் ஏராளமான உணவுகளை ஆர்டர் செய்வார்கள், நிறைய வீணாக்குவார்கள். அவர்கள் சாப்பிட்டு முடிக்கும்போது டேபிளே ஒரு பெரிய குப்பைத்தொட்டி போல ஆகியிருக்கும். இவன் மட்டும் சரியாக ஆர்டர் செய்து, ஒரு பருக்கைகூட வீணாக்காமல் சாப்பிடுவான்.

ஆள் பற்றாக்குறையால் தடுமாறிக்கொண்டிருந்த கேன்டீன்காரருக்கு உதவும்விதமாகத் தன் நண்பர்கள் விட்டுச் செல்லும் எல்லாவற்றையும் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, டேபிளைச் சுத்தமாக விட்டுச் செல்வான். நண்பர்கள் கிண்டல் செய்தாலும் பொருட்படுத்த மாட்டான்.

கேன்டீன்காரர் ஒருநாள் அவனைத் தனியாகச் சந்தித்து நன்றி சொன்னார். “இது பெரிய விஷயமே இல்லை. உங்கள் நிலையில் என்னை நினைத்துக் கொள்வேன். உங்கள் கஷ்டம் புரியும், அதனால் இதைச் செய்வேன்” என்றான் அவன்.

கல்லூரி முடிக்கும் நாளில் கேன்டீன்காரர் அவனைக் கூப்பிட்டார். “நகரில் ஒரு பெரிய ஹோட்டல் கட்டியிருக்கிறேன். அடுத்தவர்களின் பார்வையில் கஸ்டமர்களை அணுகும் ஒருவர் எனக்கு மேனேஜராகத் தேவை. நீ வருகிறாயா?” என்று கேட்டார். சம்மதம் சொல்லி வேலையில் சேர்ந்த அவன், சீக்கிரமே நகரின் முன்னணி ஹோட்டலாக அதைத் தன் சேவையால் உயர்த்தினான். அதனால் ஹோட்டலின் பங்குதாரராகவும் மாறினான். ●







# பேரூர் ஆலய நூல் வெளியீட்டு விழாவில் ராம்ராஜ்!

கோவை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் Advisory commitee member உயர்திரு S.P. அன்பரசன் அவர்கள், நல்லறம் அறக்கட்டளையின் தலைவராக இருக்கிறார். அவரது முயற்சியில் 'PERURA PATTESA' என்கிற பேரூர் ஆலய தல வரலாறு ஆங்கில சரித்திர நூல் வெளியீட்டு விழா, 17.04.2026 அன்று கோவை Hotel TAJ Vivanta-வில் அவரது நல்லறம் அறக்கட்டளை சார்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கோவை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் கௌரவத் தலைவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான உயர்திரு K.R.நாகராஜன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். சக்தி குழுமத்தின் நிர்வாக இயக்குநர் உயர்திரு. மாணிக்கம் அவர்கள், பேரூர் ஆதீனம் மதிப்பிற்குரிய சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள், கௌமார மடாலயம் மதிப்பிற்குரிய குமரகுரு சுவாமிகள் அவர்கள் மற்றும் சிறு துளி அமைப்பு நிறுவனர் திருமதி வனிதா மோகன் அவர்கள், Dollar Appararels நிர்வாக இயக்குநர் உயர்திரு ராமு அவர்கள் மற்றும் கோவை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். தொண்டாமுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு S.P. வேலுமணி அவர்கள் நன்றியுரையாற்றினார். கோவையின் முக்கியப் பிரமுகர்கள் பலரும் பங்கேற்றார்கள்.

நொய்யல்நதிக்கரையில் அமைந்திருக்கும் கொங்கு மண்ணின் பெருமைமிகு தலமான பேரூர் பட்டீஸ்வரர் ஆலயம் பற்றிய காபி டேபிள் புத்தகம் 'பேரூரா பட்டீசா'. பேரூர் ஆலயத்தின் சக்திவாய்ந்த இறை உருவங்கள், மதிப்புமிக்க சிற்பங்கள் ஆகியவற்றின் அரிய புகைப்படங்களுடன் பல்வேறு திருவிழாக் காட்சிகளையும் தொகுத்து நல்லறம் அறக்கட்டளை மூலம் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேநல்லறம் அறக்கட்டளையானது பேரூர் படித்துறையில் 108 தர்ப்பண மண்டபங்களை மிக நேர்த்தியோடும் கலைநயத்தோடும் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கட்டிக் கொடுத்துள்ளார்கள். உயர்திரு S.P. அன்பரசன் அவர்கள் தலைமையில் இயங்கி வரும் இந்த அறக்கட்டளையானது அம்மா ஐ.ஏ.எஸ் அகாடமி மற்றும் பல திருக்கோயில் நற்பணிகளையும் மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். அவர்களுக்குக் கோவை கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பாக நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## மனதிலிருந்து நேசியுங்கள்!

குரு ஒருவர் சீடர்களோடு பயணம் செய்தார். வழியில் ஒரு நாய் தாகத்தில் மயக்கமாகி, மூச்சிரைத்துக் கிடந்தது.


அதைப் பார்த்த அவர் தன் சீடர்களிடம், "அருகில் ஒரு கிணறு இருக்கிறது. அதிலிருந்து யாராவது நீர் எடுத்துவந்து அதன் தாகம் தணியுங்கள்'' என்று சொல்லிவிட்டு அருகிலிருந்த மரத்தடியில் அமர்ந்தார்.

கிணற்றில் நீர் எடுக்கப் போன சீடர்கள், அந்த இடத்தில் ஏதோ விவாதித்துவிட்டுத் திரும்பினார்கள். "கிணற்றின் வெகு ஆழத்தில் தண்ணீர் இருக்கிறது. தண்ணீரை எடுக்க வாளி இல்லை. அதனால் நாயின் தாகத்தைத் தீர்க்க முடியவில்லை" என்றார்கள்.

"நீங்கள் அனைவரும் அங்கே பாருங்கள்" என்றார் குரு. அங்கே ஒரே ஒரு சீடன் மட்டும் நாயின் நிலையைக் கண்டு அதிகம் உணர்ச்சிவசப்பட்டான். எப்படியாவது அதன் தாகத்தைத் தணித்துவிட வேண்டும் என்ற வேகம் அவன் செயல்களில் தெரிந்தது. காட்டுக்கொடிகளைப் பறித்து இணைத்தான். அதில் தன் மேலாடையைக் கழற்றிக் கட்டினான். அதை அப்படியே கிணற்றில் தூக்கிப் போட்டான். கொடியை மேலே இழுத்து, நனைந்த ஆடையை எடுத்து நாயின் வாயருகே பிழிந்தான். நீர் பரவி நாயின் தாகம் அடங்கிற்று. நாய் எழுந்து சுறுசுறுப்பானது. வாலை ஆட்டிக்கொண்டு அவனோடு வந்தது.

"நீங்கள் அனைவரும் நாய்க்கு உதவி செய்ய வேண்டும் என்று மட்டுமே நினைத்தீர்கள். ஆனால், அவன் நாயின் இடத்தில் தன்னை வைத்து அதன் தவிப்பைப் புரிந்துகொண்டான். அதனாலேயே அவனுக்குத் தண்ணீரை எடுக்கும் யுத்தி தெரிந்தது" என்றார் குரு.

'உயிர்களை மனதிலிருந்து நேசிக்க வேண்டும்' என்பதைத் தெரிந்துகொண்ட சீடர்கள், குருவுக்கு நன்றி சொன்னார்கள்.





## கனிவான நீதி!

ஒரு கடன் வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது. "இவர் என் நண்பர்தான். என்னிடம் பத்து லட்ச ரூபாய் கடன் வாங்கிவிட்டு இப்போது இல்லை என்கிறார்" என முறையிட்டார் அவர்களில் ஒருவர். இன்னொருவர், தான் கடன் வாங்கவே இல்லை என்று சாதித்தார். "கடன் கொடுத்ததற்கு யாராவது சாட்சி இருக்கிறார்களா?" என்று நீதிபதி கேட்க, "அவர் கடன் வாங்கியது வெளியில் தெரிந்தால் அவமானமாகிவிடும் என்று ரகசியமாகத்தான் கொடுத்தேன்" எனக் கண்ணீர் சிந்தினார், கடன் கொடுத்தவர்.

நீதிபதி ஒரு நிமிடம் யோசித்தார். "சரி, நீங்கள் கடன் கொடுத்த இடத்திலிருந்து ஒரு பிடி மண்ணை எடுத்து வாருங்கள்" என்று கடன் கொடுத்தவரை அனுப்பி வைத்தார். கடன் வாங்கியவரை நீதிமன்றத்தில் காத்திருக்கச் சொன்னார்.

ஒரு மணி நேரம் கடந்தது. "என்ன அவரை இன்னும் காணோம்? அந்த இடம் ரொம்ப தூரமா?" என்று நீதிபதி கேட்க, "ஆமாங்க ஐயா, ரொம்ப தூரம். அவர் திரும்பி வர இன்னும் ஒரு மணி நேரமாகும்" என்று அவசரமாகச் சொன்னார், கடன் வாங்கியவர். நீதிபதி அவரை எரித்துவிடுவது போலப் பார்த்தார். "நீ கடன் வாங்கவில்லை என்றால், அந்த இடம் ரொம்ப தூரம் என்று எப்படித் தெரியும்?" என்று கேட்டுவிட்டு, அவரை உடனே கடனைத் திருப்பித் தரச் சொன்னார். நீதிபதியின் கனிவான அணுகுமுறை, கடன் கொடுத்தவரைக் காத்தது.

## கனிவான தபால்காரர்!

கருப்பையா தான் வழக்கமாகத் தபால்களை டெலிவரி செய்யும் வீதிக்கு வந்தபோது வித்தியாசமான ஒரு காட்சியைப் பார்த்தார். காலை 11 மணிக்கு ஆள் நடமாட்டமே இல்லாத வீதியில் ஒரே ஒரு குழந்தை மட்டும் வெளியில் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தது. பல ஆண்டுகளாக அந்தப் பகுதியில் பணிபுரியும் தபால்காரர் என்பதால், அவருக்கு அங்கு ஒவ்வொரு வீட்டையும் தெரியும். அந்த ஒன்றரை வயதுக் குழந்தையை அதன் அம்மா வெளியிலேயே விடமாட்டார்கள். அப்பா காலையில் வேலைக்குக் கிளம்பிப் போனபிறகு அம்மாவும் குழந்தையும் மட்டுமே வீட்டில் இருப்பார்கள். அக்கம்பக்க வீடுகளிலும் யாரும் வெளியில் வருவதில்லை என்பதால், குழந்தை பகல் நேரத்தில் வீதியில் இருக்காது.

கருப்பையா உடனே சைக்கிளில் இருந்து இறங்கி அந்தக் குழந்தையிடம் பேச்சுக் கொடுத்தார். இன்னமும் பேச்சுப் பழகாத அந்தக் குழந்தை தன் வீட்டை நோக்கிக் கைகாட்டியது. கருப்பையா பின்னாலேயே போய்ப் பார்த்தால், வீட்டில் அந்தக் குழந்தையின் அம்மா மயங்கி விழுந்திருந்தார். படிக்கட்டில் விழுந்ததால் தலையில் அடிபட்டு லேசாக ரத்தக்கசிவும் ஏற்பட்டிருந்தது. சட்டென்று அக்கம்பக்க வீட்டினரை உதவிக்குக் கூப்பிட்டு, ஆம்புலன்ஸுக்கும் போன் செய்து வரவழைத்தார் கருப்பையா. அரை மணி நேரத்தில் அந்தப் பெண் கண்திறந்து பேச ஆரம்பித்துவிட்டார். உடல்நலமில்லாமல் வேலை பார்த்ததில் வந்த சாதாரண மயக்கம்தான். அப்படியே விட்டிருந்தால் அபாயமாகி இருந்திருக்கும். சரியான நேரத்தில் காப்பாற்றிய கனிவான தபால்காரருக்கு நன்றி சொன்னார்கள் மக்கள்.





## உதவி செய்தவர்!

நகரத்தின் ஒரு பகுதியில் புயல் தாக்கி கடுமையான சேதம். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ உடைகள், உணவு என எல்லாம் அனுப்பிக்கொண்டிருந்தார்கள் மக்கள். ஒரு கடையில் பொருட்கள் வாங்க நீண்ட க்யூ. ஒரு பெண்மணி தன் கையில் இருந்த கூடையில் சோப்பு, டூத்பேஸ்ட், பிரஷ், சமையல் பொருட்கள், துணிகள் என்று வைத்துக்கொண்டு பில் போட நின்றிருந்தார். “பாதிக்கப்பட்டவங்களுக்கு அனுப்பப் போறீங்களா?” என்று க்யூவில் பின்னால் இருந்தவர் கேட்க, அந்தப் பெண் அழுதுவிட்டார். ‘‘இல்லைங்க, நானே பாதிக்கப்பட்டவள்தான். திடீர்னு தண்ணீர் வீட்டுக்குள்ள வந்ததுல எல்லாமே போயிடுச்சு. மொத்தமா இழந்துட்டு ரோட்டுல நிக்கறோம். பசங்க பசியில் தவிக்குதுங்க. யார் கிட்டேயும் கேட்கக் கூச்சமா இருக்கு. கையிருப்பை வச்சு இதையாவது வாங்கிப் போய் சமைக்கணும்” என்று அவர் கதறியபடி சொல்ல, எல்லோரும் திகைத்துவிட்டனர்.

அதன்பின் எல்லோரும் தங்களுக்குள் பேசிக்கொண்டு ஏதேதோ வாங்கிக் கொடுக்க, அவர் வீட்டுக்குத் தேவையான அத்தனை பொருட்களும் சேர்ந்துவிட்டன.

# இதுவும் கடந்து போகும்!

ஒரு மன்னர் பதவியேற்கும் நாளில் தன் அமைச்சர்களையும் ஆலோசகர்களையும் அழைத்தார். “இந்த உலகத்தில் எத்தனைக் காலங்கள் கடந்தாலும் நிலைத்து நிற்கக்கூடிய ஒரு வாசகத்தை எனது முத்திரை மோதிரத்தில் பதித்துக்கொள்ள விரும்புகிறேன். துயரத்தில் இருக்கும்போது அந்த வாசகத்தைப் படித்தால் எனக்கு உற்சாகம் பிறக்க வேண்டும். அப்படி ஒரு வாசகத்தை எனக்குச் சொல்லுங்கள்” என்று அனைவரிடமும் கேட்டுக்கொண்டார். அதற்காக மூத்த அமைச்சர் ஒருவர் சொன்ன வாசகம்தான், ‘இதுவும் கடந்து போகும்!’

மன்னர் சாலமன் காலத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது. ரூமி உள்ளிட்ட பல கவிஞர்கள் இந்த வாசகத்தை எழுதியிருக்கிறார்கள். பல சமூகங்களில் நாடோடிக் கதைகளில் இதே அர்த்தம் தொனிக்கும் வாசகங்கள் இடம்பிடித்திருக்கின்றன. ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது நிகழ்த்திய சொற்பொழிவில் இந்த வாசகத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்.

மனிதர்கள் தங்கள் அனுபவ அறிவின் மூலம் கண்டடைந்த வாழ்க்கை நெறிகளில் மிக முக்கியமானதாக இதுவே கருதப்படுகிறது. இதுவே துயரத்தில் தவிப்பவர்களுக்கு ஆறுதல் தரும். வெற்றிக் களிப்பில் ஆர்ப்பாட்டம் செய்கிறவர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கும். தோல்வியில் துவண்டுபோய் வீழ்ந்திருப்பவர்களுக்கு நம்பிக்கை உரமூட்டும். நாம் எதையும் கடந்து போகலாம், ஆனால் அந்தச் சூழல் நமக்குக் கற்றுக்கொடுத்த பாடங்களை மறந்துவிடக் கூடாது.

ஒரு பிரச்னையைச் சந்திக்கும்போது, நெருக்கடியான ஒரு சூழலைக் கடக்கும்போது, நம் முயற்சியில் பின்னடைவு ஏற்படும்போது, நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய மந்திரம் இது. உணவு, மருந்து என்று நாம் பயன்படுத்தும் எல்லாப் பொருட்களுக்கும் ஒரு எக்ஸ்பயரி தேதி இருப்பது போலப் பிரச்னைகளுக்கும் தோல்விகளுக்கும்கூட எக்ஸ்பயரி தேதி உண்டு. எனவே இந்த மந்திரத்தையும் இன்னும் சில விஷயங்களையும் உணர வேண்டியது முக்கியம். அவை:

- சில சூழல்களில் காரணமே இல்லாமல் நம்மை மனிதர்கள் சிலர் புண்படுத்தக்கூடும். ‘ஏன் இவர்கள் இப்படிச் செய்தார்கள்’, ‘எதற்காக இப்படிப் பேசினார்கள்’ என்று புரியாமல் தவித்துப் போய்விடுவோம். ஆனால், அதை மனதுக்குக் கொண்டுபோகாதீர்கள். ‘நீ முன்னேற மாட்டாய்’ என்று யாரோ சொல்கிறார்கள் என்பதாலேயே நாம் தோல்வியாளர்கள் கிடையாது. அதையே நினைத்துக்கொண்டிருந்தால் முடங்கிப் போய்விடுவோம். அதை மறந்து, அவர்களை மன்னித்துவிட்டுக் கடந்து போய்விடுவோம். இல்லாவிட்டால் நமக்குத்தான் வீண் மன உளைச்சல்.



• ஓர் இலக்கு வைக்கிறீர்கள். அதை அடைந்தும் விட்டீர்கள். அந்தச் சாதனையில் பெருமிதம் அடையலாம். அது உங்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையைக் கொடுக்கும். ஆனால், அதே இடத்தில் தேங்கிப் போகாமல் ‘அடுத்தது என்ன?’ என்று ஒரு கேள்வியை உங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும். அதைவிட உயரமான இன்னொரு இலக்கை நோக்கிச் சீக்கிரமே முன்னேற வேண்டும். ஏனெனில், இந்தச் சாதனையைச் சில காலத்தில் எல்லோருமே மறந்துவிடுவார்கள். எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்தவர்களிடம்கூட, ‘அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்?’ என்ற கேள்வி கேட்கப்படுகிறது. இந்த மாதிரிக் கேள்விகள் எரிச்சல் தரலாம். ஆனால், அதுதான் உங்களைப் பசித்திருக்க வைக்கும், அடுத்த செயலை நோக்கி முன்னேறத் தூண்டும்.

• உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியம் என்று கருதும் ஒரு செயலைச் செய்வதற்குப் பொருத்தமான நேரத்துக்காகக் காத்திருக்காதீர்கள். இன்றே, இப்போதே அதற்குப் பொருத்தமான நேரம் வந்துவிட்டதாக நினையுங்கள். பணம், பொருள் என்று வேறுவித தேவைகளுக்காகக் காத்திருப்பதில் அர்த்தம் இருக்கலாம். ஆனால், நல்ல நேரத்துக்காகக் காத்திருக்காதீர்கள்.

• காலங்கள் எப்படி வேண்டுமானாலும் மாறலாம். ஆனால், மனிதர்கள் மாறக்கூடாது. இன்பமான நேரமோ, துன்பமான காலமோ, எப்போதும் நேர்மையைக் கைவிடாதீர்கள். உண்மையைப் பேசுவதும், உண்மையாக நடந்துகொள்வதுமே, எப்போதும் உங்களைக் காக்கும் கவசங்கள். இந்தப் பண்பு உங்களுக்கு எல்லா வெற்றிகளையும் பெற்றுத் தரும்.



• உங்களைச் சுற்றியிருக்கும் நண்பர்களைத் தேர்வு செய்வதில் கவனமாக இருங்கள். எதிர்மறையாகப் பேசி உங்களைப் பின்னால் இழுப்பவர்கள் வேண்டாம், உங்கள் சக்தியை உறிஞ்சிவிடும் அளவுக்குச் சோர்வாகப் பேசுவோரும் வேண்டாம், உங்களைப் பயமுறுத்தி எதையும் செய்யவிடாமல் தடுப்பவர்களும் வேண்டாம். உற்சாகமும் தன்னம்பிக்கையும் தரும் நண்பர்கள் சூழ வாழுங்கள்.

• எல்லோரையும் கனிவாகவும் அன்பாகவும் நடத்துங்கள். இயன்றவரை எல்லோருக்கும் உதவுங்கள். பரந்த மனதுடன் நீங்கள் செய்யும் உதவிகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் உங்களுக்கு நன்மையாக வந்து சேரும். ஏனெனில், அன்புச் சங்கிலியால்தான் இந்த உலகம் பிணைக்கப்பட்டிருக்கிறது.

• உங்களுக்கு வழிகாட்ட நிறைய பேர் இருக்கலாம். யோசனைகள் சொல்வதற்குப் பலர் முன்வரலாம். அனுபவசாலிகள் உங்களை வழிநடத்தலாம். எல்லாவற்றையும் தாண்டி உங்கள் உள்ளுணர்வு சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்கு எது சிறப்பாக வரும், உங்கள் திறமைக்கும் தகுதிக்கும் ஏற்ற செயல் எது என்பதை மற்றவர்களைவிட உங்கள் மனமே முழுமையாக அறியும். அது சொல்லும் கணிப்பு தவறாக இருக்காது. வெற்றியாளர்கள் பலரும் தங்கள் வாழ்வின் சிறந்த முடிவுகளை தங்கள் உள்ளுணர்வு சொல்வதன்படியே எடுக்கிறார்கள்.

• உங்களின் தனித்திறமை என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தத் திறனைக் காலம் காலமாக வளர்த்து வந்திருப்பீர்கள். அந்தத் திறமையை முழுமையாகப் பயன்படுத்த முடிகிற ஒரு செயலையே எப்போதும் செய்யுங்கள். முக்கியத்துவம் இல்லாத, உங்கள் தகுதிக்குக் குறைவான செயல்களின் பின்னால் போகாதீர்கள்.

• உங்கள் பலம் என்ன, பலவீனம் என்ன என்பதை உங்களைவிட அறிந்தவர்கள் இருக்க முடியாது. உங்களின் பலவீனங்கள் எதுவும் உங்கள் வெற்றியைப் பாதிக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் பலம் எதுவோ, அதை வளர்த்துக்கொண்டே இருங்கள்.

• வெற்றிகள் அடையும்போது வானத்தில் மிதக்கவும் தேவையில்லை, தோல்விகளில் தடுமாறும்போது சோர்ந்து மண்ணில் வீழவும் தேவையில்லை. வெற்றிகளின்போது, ‘இதைவிடச் சிறந்த இன்னொரு வெற்றியை என்னால் எட்ட முடியும்’ என்று நினையுங்கள். தோல்விகளின்போது, ‘இந்த நிலையை என்னால் மாற்ற முடியும்’ என்று நம்பிக்கை கொள்ளுங்கள். எந்தச் சூழலிலும் நிதானம் தவறாதவர்களே,வாழ்க்கையை அனுபவித்துக்கனிவுபரப்பி வாழ்கிறார்கள். ●



# கனிவு காட்டிப் பேசுங்கள்!

நமக்கு மிகவும் நெருக்கமான ஒருவர் கடுமையான துயரத்தில் இருக்கும்போது, அவருடன் ஐந்து நிமிடங்களாவது ஆறுதலாகப் பேசுகிறோம். இப்படிப் பேசுவது அவரின் ஒட்டுமொத்தப் பிரச்னைகளையும் தீர்த்துவிடுமா? நிச்சயம் தீர்க்கவே தீர்க்காது. ஆனாலும் ஏன் அப்படிப் பேசுகிறோம்? அந்தத் தற்காலிக ஆசுவாசம் ஒருவேளை அவர்களுக்கான சிறு நம்பிக்கை ஒளிக்கீற்றைக் கொடுக்கலாம். அந்த ஒளிக்கீற்றின் மூலம் தன் பெரிய பிரச்னையைத் தீர்க்கும் நம்பிக்கையை அவர் பெறலாம்.

இத்தாலிய நாடோடிக் கதை ஒன்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஒரு நிலப்பிரபு தன் மனைவி, குழந்தைகளுடன் மிகுந்த வசதியாக வாழ்ந்து வருவார். திடீரென்று அந்த நாட்டின் அரசரைப் பக்கத்து நாட்டு அரசர் போரில் தாக்கிக் கொல்வார். பிரபுவைச் சிறையில் வைத்து விடுவார்.

பிரபுவின் மனைவி தன் குழந்தைகளுடன் கப்பலில் தப்பித்துச் செல்வார். குழந்தைகள் எதிரில் அவர் தன் கவலையை வெளிப்படுத்த மாட்டார். கப்பல் ஒவ்வொரு தீவில் நிற்கும்போதும் அவர் இறங்கி, தீவுக்குச் சென்று தனியே அமர்ந்து அழுவார். பிறகு கண்ணீரைத் துடைத்துவிட்டு மறுபடி கப்பலுக்கு வருவார்.

அப்படி ஒருமுறை இவர் ஒரு தீவில் இறங்கி அழுது கொண்டிருக்கும்போது, கடல் கொள்ளையர்கள் அக்கப்பலைத் தாக்கிக் கடத்திச் சென்றுவிடுவார்கள். இவர் 'ஓ'வென்று அழுது முடித்துக் கவலையைக் கரைத்துவிட்டுக் கரைக்கு வரும்போது கப்பலைக் காணவில்லை. தன் குழந்தைகள் கப்பலோடு கடத்தப்பட்ட உண்மையை அறிந்திருப்பார்.

அந்தப் பெண்ணுக்கு அந்த நிமிடத்தில் எப்படிப்பட்ட உணர்வுகள் இருந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். கணவர் சிறையில் இருக்கிறார், குழந்தைகள் கப்பலோடு போய்விட்டார்கள். இனி அவர்களில் யாரையும் அவரால் மீட்கமுடியுமா என்று தெரியவில்லை. 'இனிமேல் நான் வாழ்வதில் அர்த்தமில்லை' என்று தற்கொலை முடிவுக்குப் போக நினைப்பார்.

அப்போது அவரைப் பார்த்தபடி அங்கே ஒரு பெண் ஆடு நிற்கும். அந்த ஆட்டைப் பார்த்ததும் ஏதோ ஒரு மலர்ச்சி அந்தப் பெண்ணுக்கு வரும். ஆடு நகர, அதைப் பின்தொடர்வார். ஆடு ஒரு குகைக்குள் செல்லும். அங்கே ஆடு அப்போதுதான் போட்ட இரண்டு குட்டிகள் இருக்கும். இந்தப் பெண் அந்த ஆட்டுக்குட்டிகளை எடுத்து வாஞ்சையாக நெஞ்சில் வைத்துக் கொள்வார். ஆட்டுக்குட்டிகளோ அவர் மார்பில் சுரக்கும் பாலைக் குடிக்க ஆரம்பிக்கும். ஆட்டுக்குட்டிகள் அப்படித் தன்னைத் தாயாக நினைத்துப் பால் குடிப்பது இவருக்குப் பிடித்திருக்கும். அப்படியே அந்தப் பெண் ஆட்டுடனும் அதன் குட்டிகளுடனும் கதகதப்பாகப் படுத்துக்கொள்வார்.

அந்த ஆடுகளுக்காகவே தான் தற்கொலை செய்துகொள்ளக்கூடாது என்று நினைப்பார். அப்படியே ஒரு வருடம் அந்தத் தீவில் வசிப்பார்.

ஒரு வருடம் கழித்து அந்தத் தீவுக்கு இன்னொரு கப்பல் வரும். அந்தக் கப்பலில் வந்த வியாபாரி, இந்தப் பெண்ணைப் பார்த்துப் பரிதாபப்பட்டுத் தன்னுடன் கப்பலில் அழைத்துச் செல்வார். அவர் கதையைக் கேட்டுக் கலங்குவார். அவரைத் தன் தங்கையாக நினைக்கிறேன் என்று அன்பு காட்டுவார்.

வருடங்கள் உருண்டோடுகின்றன. தீவிலிருந்து கப்பலோடு சேர்த்துக் கடத்திச் செல்லப்பட்ட பிரபுவின் இரண்டு குழந்தைகளும் அந்த வியாபாரியிடமே அடிமையாக வேலை செய்ய வருவார்கள். வியாபாரியின் வீட்டில் தங்கள் அம்மாவைக் கண்டதும் அவர்கள் ஓடோடி வந்து அணைத்துக்கொள்கிறார்கள். பிறகு தாயும் குழந்தைகளும் சேர்ந்து படை திரட்டிப் போரிட்டு, தங்கள் தந்தையை மீட்டுக் குடும்பமாய் ஒன்று சேர்வார்கள்.

இந்தக் கதையில் வரும் அந்தப் பெண்ணின் பெரிய மன அழுத்தமான குடும்ப இழப்பை, குடும்பப் பிரிவை அந்த இரண்டு பச்சிளம் ஆட்டுக்குட்டிகள் தற்காலிகமாகத் தீர்த்து வைக்கின்றன. தற்காலிக ஆசுவாசத்தைக் கொடுக்கின்றன. அந்த ஆடுகள் செய்தது மிகச்சிறிய விஷயம், அவர்மீது அன்பு காட்டியதுதான் அது. அதைத் தாண்டி ஆறுதலாக அவை எதையும் செய்துவிடவில்லை. ஆனாலும் அந்த அன்பால் கிடைத்த தற்காலிக ஆசுவாசம் கொடுத்த நம்பிக்கையில் அவர் பெரிய விஷயத்தையே சாதித்து விடுகிறார்.

நம் அனைவருக்கும் இது பொருந்தும். ஏதாவது பிரச்னைகள் குறுக்கிட்டு மன அழுத்தமாக இருக்கும்போது கிடைக்கும் தற்காலிக ஆசுவாசங்களை நம்புங்கள். ‘அந்தப் பெரிய பிரச்னை தீர்ந்தால்தான் சிரிப்பேன்’ என்று பிடிவாதமாக இருக்காதீர்கள். நம்பிக்கையான நண்பர்கள் அல்லது உறவினர்களிடம் மனம்விட்டுப் பேசுங்கள். அவர்கள் சொல்லும் ஆறுதல் வார்த்தைகளை மனதுக்குள் கொண்டுசெல்லுங்கள். உங்களுக்குப் பிடித்த ஏதோ ஒன்றைத் தற்காலிகமாகச் செய்து ஆசுவாசம் பெறுங்கள். ஒருவேளை அதுவே உங்கள் நம்பிக்கையை அதிகப்படுத்திப் பெரிய விஷயங்களைச் சமாளிக்கும் மன உறுதியைக் கொடுக்கலாம்.

அதுபோல உங்கள் நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு, சுற்றி உள்ளவர்களுக்குத் தற்காலிக ஆசுவாசத்தைக் கொடுக்க முயற்சி செய்யுங்கள். அவர்கள் ஒரு பிரச்னை என்று சொல்ல வந்தால் காது கொடுத்துக் கேளுங்கள். நம்பிக்கை வார்த்தைகளால் அவர்களுக்கு ஆறுதல் கொடுங்கள்.

ஒரு பிரச்னையை மனம்விட்டுப் பேசும்போது,

- பிரச்னையைத் தீர்க்கப் புதுப்புது யோசனைகள் தோன்றும்.
- வாய்விட்டு அதைச் சொல்லும்போது மனதுக்கு ஆறுதலாய் இருக்கும்.
- நம் பிரச்னையை அக்கறையாகக் கேட்கவும் ஆள் இருக்கிறார்களே என்ற தைரியம் வரும்.

எனவே, தற்காலிக ஆசுவாசத்தை நம்புங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்களின் பிரச்னைகளை நல்ல மனதோடு, அக்கறை முகபாவனையோடு அன்பாகக் காது கொடுத்துக் கேட்டு, கனிவான வார்த்தைகளைப் பகிர்ந்து நன்மை செய்யுங்கள். ●




# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 10 இதழ் 11

மே 2026

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

K. **உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

எண். 188, தரை தளம்,

14வது குறுக்குத் தெரு சந்திப்பு,

டிபென்ஸ் காலனி, ஈக்காட்டுத்தாங்கல்,

சென்னை - 600 032.

கைப்பேசி: 9952920801

email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137



# மகிழ்ச்சியைப் பரிசளிப்போம்!

“இன்னைக்கு அழுக்குத்துணியைத் துவைக்கப் போடாதீங்க, வீட்டையும் கொஞ்சம் சுத்தமா வச்சிக்க உதவுங்க. வேலைக்கார அம்மா ரெண்டு நாளைக்கு வர மாட்டாங்க” என்றார் மனைவி. “ஏன்?” என்ற கணவரின் கேள்விக்கு, “அவங்க சொந்த ஊர்ல திருவிழாவாம். அதுக்குப் போறாங்க” என்றார் மனைவி. கூடவே, “ஏங்க, அவங்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து அனுப்பட்டுமா?” என்றும் கேட்டார்.

கணவருக்குக் கோபம் வந்தது. “சீக்கிரமே தீபாவளி வரப்போகுது. அப்போ எப்படியும் போனஸ் தருவோமே! இப்ப எதுக்குப் பணம்?” என்றார். “ஏங்க, அவங்க சொந்த ஊருக்குப் போறாங்க. மகள் வீடு அங்கே இருக்கு. பேரன், பேத்திங்க இருப்பாங்க. திருவிழா நேரத்துல போறாங்க. ஏதாவது வாங்கிட்டுப் போக வேண்டாமா? இந்தப் பணத்தைக் கொடுக்கறதால நாம ஒண்ணும் குறைஞ்சுப் போயிட மாட்டோம்” என்று மனைவி சமாதானம் சொன்னார்.


‘‘வேலை செய்யறவங்களோட நீ ரொம்ப எமோஷனலா நெருங்கிடறே! இது நல்லதில்லை” என்று எச்சரித்தார் கணவர். “சரி, விடுங்க! இந்தச் செலவை ஈடுகட்டறதுக்கு, ஞாயிற்றுக்கிழமை நாம ஆர்டர் பண்ணிச் சாப்பிடற பீட்சாவை விட்டுட்டு வீட்டுல நல்ல சாப்பாடு சமைச்சுக் கொடுத்துடறேன். அந்த வறட்டியைச் சாப்பிடறதுக்குப் பதிலா, ருசியா வீட்டுச் சாப்பாடு சாப்பிடலாம்” என்று மனைவி சிரித்தபடிச் சொல்லிவிட்டுப் போனார்.

மூன்றாவது நாள் வேலைக்கார அம்மா விடுமுறை முடிந்து வந்தார். வழக்கத்தைவிடச் சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்தார். மனைவி வந்து காபி கொடுக்கும்போது கணவர், ‘‘அவங்க ஊர்ப்பயணம் எப்படி இருந்துச்சுன்னு விசாரிச்சியா?” என்றார்.

வேலைக்கார அம்மாவே உற்சாகமாகிப் பதில் சொன்னார், “ரொம்ப நல்லா இருந்துச்சுங்கய்யா! அம்மா எனக்கு ஆயிரம் ரூபா திருவிழா போனஸ் கொடுத்தாங்க. நான் எதிர்பார்க்கவே இல்லை. பேத்திக்கு நல்லதா ஒரு டிரஸ் வாங்கிட்டுப் போனேன், பேரனுக்கு நல்ல ஜாமென்ட்ரி பாக்ஸ் வேண்டும்னு கேட்டான். அது வாங்கிக் கொடுத்தேன். பொண்ணுக்கு வளையல், மருமகனுக்கு ஸ்வீட்னு எல்லாம் வாங்கிட்டுப் போனேன். திருவிழாவுல குழந்தைகளுக்குப் பொம்மைகள் வாங்கிக் கொடுத்தேன். எல்லாருக்கும் சந்தோஷம். கோயில் உண்டியல்ல 50 ரூபா காணிக்கை போட்டேன். ஊருக்குப் போய்த் திரும்பி வந்ததும், மிச்சம் இருந்த பணத்தைக் கொடுத்து மளிகைக் கடை பாக்கியை அடைச்சிட்டேன்” என்றார் அவர்.

அதைக் கேட்ட அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. எதிர்பாராமல் கூடுதலாகக் கிடைத்த ஆயிரம் ரூபாயில் ஒருவரால் இத்தனை பேரைச் சந்தோஷப்படுத்த முடியுமா என்று வியந்தார். அவரின் கற்பனையில், அவர் அந்த வாரம் சாப்பிட்டிருக்க வேண்டிய பீட்சா துண்டுகள் வெவ்வேறு வடிவங்களாகத் தெரிந்தன. ஒரு துண்டு பேத்தியின் உடையாக மாறியது, இன்னொன்று ஜாமென்ட்ரி பாக்ஸ் ஆனது, வேறொன்று வளையல் ஆனது, மற்றொன்று பொம்மை ஆனது. தான் ஆடம்பர உணவாகச் சாப்பிடும் பீட்சாவை இன்னொரு கோணத்தில் அவர் பார்த்தார். அத்தனை பேருக்கு மகிழ்ச்சியைப் பரிசளித்த நிறைவு அவருக்குள் எழுந்தது. ●


RAMRAJ
SHIRTINGS & SUITINGS
COTTON • LINEN
Start with the Finest
Fabric


LINEN PARK®
DHOTIS• SHIRTS• TROUSERS• FABRICS
by
RAMRAJ
SOFT&
GENTLE

# NEW ARRIVAL

RAMRAJ
GENXT
INSTA DHOTIS™
Just maatigo...



5 SEC WEAR

## INSTA DHOTI

Ready-to-wear dhoti designed for the modern man-wear it in seconds with a perfect traditional look and effortless comfort.


mrithu®
Bamboo Towels
by
RAMRAJ
SOFTNESS
that hugs you back
Bamboo Towels | Terry Towels | Signature Towels | Striped Towels | Chequered Towels
Premium Cotton | High Absorption | Quick Drying | Super Soft

RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

**உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?**

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். VENMAII என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

**சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.**
**போன்:**
**0421-4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**

## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை



**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை



**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



# கனிவின் அடையாளமான மருத்துவர்கள்!

ஒரு நகரத்தில் புகழ்பெற்ற இதய நோய் நிபுணர்கள் இரண்டு பேர் இருந்தார்கள். 'இனி பிழைக்க மாட்டார் என்று கைவிடப்படும் நோயாளிக்குக்கூட இவர் ஆபரேஷன் செய்தால் பிழைத்துவிடுவார்' என்று சொல்லும் அளவுக்கு இருவரும் பெயர் வாங்கியிருந்தார்கள். ஆனால், அவர்களுக்குள் கடுமையான தொழில் போட்டி இருந்தது. இருவரும் பேசிக்கொள்வதுகூட இல்லை. இது கிட்டத்தட்ட நகரத்தில் எல்லோருக்குமே தெரியும்.

ஒருநாள் திடீரென அதில் ஒரு டாக்டருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. உடனே தன் மனைவியைக் கூப்பிட்டு, தன் போட்டி டாக்டரிடம் சிகிச்சைக்கு அழைத்துப் போகச் சொன்னார். 'இருவரும் பரம எதிரிகள் ஆயிற்றே' என்று குடும்பத்தினர் தயங்கினாலும், அந்த அவசரச் சூழலில் வேறு வழியில்லாமல் அப்படியே செய்தார்கள். உடனே ஆபரேஷன் செய்ய வேண்டியிருந்த சூழலில், அந்த டாக்டரும் வெற்றிகரமாகச் சிகிச்சை கொடுத்து அவரைக் காப்பாற்றினார். இருவரும் நெகிழ்ச்சியுடன் அரவணைத்துக் கொண்டார்கள்.

''உங்கள் தொழில் போட்டியாளரை ஏன் காப்பாற்றினீர்கள்?'' என்று நண்பர் ஒருவர் கேட்டபோது அந்த டாக்டர் சொன்னார். "தொழில் போட்டி வேறு, தொழில் தர்மம் வேறு. என்னிடம் சிகிச்சைக்கு வருபவர் யாராக இருந்தாலும், அவருக்கு மிகச்சிறந்த சிகிச்சையை வழங்கி உயிர் காப்பது என் கடமை. எல்லா டாக்டரும் இதைத்தான் செய்வார்கள். எனக்கு ஆபத்து வந்திருந்தாலும், அவரும் எனக்கு இப்படித்தான் சிகிச்சை அளித்திருப்பார்."

உயிரை உருவாக்கும் அற்புதத்தை அன்னையர்கள் செய்கிறார்கள். அந்த உயிரைக் காக்கும் உன்னதப் பணியை டாக்டர்கள் செய்கிறார்கள். அதனால்தான் டாக்டர்கள் 'இரண்டாவது கடவுள்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். கடவுளைப் போலவே உயிர் காக்கும் சிகிச்சையைத் தருவது டாக்டர்கள்தான்.

நவீன மருத்துவத்துக்கு மகத்தான பங்களிப்பு செய்து, பல லட்சம் உயிர்களைக் காப்பாற்றிய கனிவான சில மருத்துவர்களை நன்றியுடன் நினைவுகூரலாம்.


**வில்லியம் ஹார்வி:** 450 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் பிறந்த மருத்துவர். இதயம் சுருங்கி விரிவதால்தான் நம் உடல் முழுக்க ரத்தம் பாய்கிறது என்பதை முதன்முதலில் கண்டறிந்த மருத்துவர். உடலில் ரத்த ஓட்டம் பாய்வதை மிக விரிவாக விவரித்த முதல் நவீன மருத்துவர்.






**எட்வர்டு ஜென்னர்:** 270 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் பிறந்த மருத்துவர். நவீன உபகரணங்கள் எதுவும் இல்லாத ஒரு காலத்தில், பெரியம்மை நோய்க்குத் தடுப்பு மருந்து கண்டறிந்தவர். பெரியம்மைக் கொப்புளத்திலிருந்து திரவத்தை எடுத்து அவர் உருவாக்கிய தடுப்பு மருந்து முறை, 8 வயது சிறுவன் ஒருவனுக்குப் பெரியம்மை நோயிலிருந்து தற்காப்பு அளித்தது. உலகின் முதல் தடுப்பு மருந்து அதுதான். நோய் எதிர்ப்புத் தடுப்பு மருந்துத் துறையின் தந்தை என்று எட்வர்டு ஜென்னர் கருதப்படுகிறார்.

லட்சக்கணக்கான பெரியம்மை நோய் மரணங்களைத் தடுத்த டாக்டர் அவர். தடுப்பூசி மூலம் இந்த உலகிலிருந்து பெரியம்மை நோய் முற்றிலும் ஒழிக்கப்பட அடித்தளம் போட்டவர் அவர். இன்று பல நோய்களுக்கும் தடுப்பூசி போட்டுக்கொள்ளும்போது அவரை நன்றியுடன் நினைக்க வேண்டும்.



**அலெக்ஸாண்டர் ஃபிளெமிங்:** ஆன்டிபயாடிக் மருந்தான பென்சிலினை உருவாக்கிய ஸ்காட்லாந்து டாக்டர். பல்வேறு நோய்த்தொற்றுகளிலிருந்து லட்சக்கணக்கான மனிதர்களைக் காப்பாற்றிய மருந்து பென்சிலின். அதன்பின் அதைவிட வீரியமான ஒரு ஆன்ட்டிபயாடிக்கை மருத்துவ உலகம் உருவாக்கப் பல ஆண்டுகள் ஆனது.



**ஜோஸப் லிஸ்டர்:** இங்கிலாந்தைச் சேர்ந்த இந்த அறுவை சிகிச்சை நிபுணர், நவீன அறுவை சிகிச்சையின் தந்தை என்று மேற்கத்திய மருத்துவர்களால் அழைக்கப்படுகிறார். 125 ஆண்டுகளுக்கு முன்பு அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் ஆன்ட்டிசெப்டிக் மருந்துகள் பற்றி அறிந்திருக்கவில்லை. அறுவை சிகிச்சை செய்ததும் குணமடையும் ஒரு நோயாளி, அதன்பின் அந்த அறுவை சிகிச்சைக் காயத்தில் நோய்த்தொற்று ஏற்பட்டு இறப்பதன் காரணம் அறியாமல் குழம்பினார்கள். பல டாக்டர்களும் நோய்த்தொற்றால் இறந்தார்கள். அறுவை சிகிச்சை செய்யும் இடத்தில் ஆன்ட்டி செப்டிக் மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கண்டறிந்தவர் லிஸ்டர். இன்று எந்த அறுவை சிகிச்சையும் நூறு சதவிகிதம் நோய்த்தொற்று ஏற்படாமல் நிகழ்வதற்குக் காரணம் அவரே!



**ஃபிரடெரிக் பேன்டிங்:** கணையம் செயலிழந்த டைப் 1 வகை சர்க்கரை நோயாளிகள் மரணத்தைத் தழுவுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை இருந்தது. இன்சுலின் என்ற ஹார்மோனை தனியாகப் பிரித்தெடுத்து ஊசி மூலம் செலுத்த முடியும். அதை வைத்து சர்க்கரை நோயாளிகள் உயிர் காக்க முடியும் என்ற ஆய்வைச் செய்தவர்களில் ஒருவர் ஃபிரடெரிக் பேன்டிங். கனடா நாட்டைச் சேர்ந்த இந்த மருத்துவரின் கண்டுபிடிப்பே, இன்று உலகம் முழுக்க கோடிக்கணக்கான சர்க்கரை நோயாளிகள் நலமுடன் வாழ உதவுகிறது.



**ஜோனாஸ் சால்க்:** போலியோ என்ற வைரஸ் தொற்று லட்சக்கணக்கான குழந்தைகளை முடக்கிப் போட்டது. கால்கள் முடங்கிப் போய் வாழ்நாள் முழுக்க ஊன்றுகோலுடன் இயங்க வேண்டிய அவலநிலைக்குப் பலர் ஆளானார்கள். இந்த நிலையை மாற்றிட, போலியோ தடுப்புமருந்தை உருவாக்கியவர் ஜோனாஸ் சால்க். அந்த மருந்தைத் தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் செலுத்தி அதன் பாதுகாப்பை உறுதி செய்த துணிச்சல்காரர். தன் கண்டுபிடிப்புக்குக் காப்புரிமை பெறாமல், உலகமே அதை மலிவுவிலையில் பயன்படுத்திக்கொள்ளட்டும் என்று அறிவித்தவர். அவர் உருவாக்கிய தடுப்பு மருந்து, இன்று பல நாடுகளைப் 'போலியோ இல்லாத பிரதேசங்களாக' மாற்றிவருகிறது.



**கிறிஸ்டியன் பெர்னார்ட்:** தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த இந்த இதயநோய் அறுவை சிகிச்சை நிபுணர்தான் உலகின் முதல் இதய மாற்று அறுவை சிகிச்சையைச் செய்தவர். இன்று உலகெங்கும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்களுக்கு முன்னோடி. உறுப்பு தானத்தால் உயிர் காக்கலாம் என்பதை நிஜமாக்கியவர்.

இப்படி எத்தனையோ கனிவான மருத்துவர்களின் சேவையால்தான் நமக்கு ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் கிடைக்கிறது. ●



# நல்லதாய் மாறுங்கள்!

கல்லூரியில் தத்துவப் பேராசிரியர் ஒருநாள் வகுப்பெடுத்தார். "எல்லோரும் இன்று வெளியே போய்ச் சுற்றி வாருங்கள். உலகத்தைப் பாருங்கள். அப்படிப் பார்க்கும்போது நல்லவர்களாக மாறுங்கள். நல்ல விஷயங்களைச் செய்யுங்கள். மாலை 4 மணிக்கு மீண்டும் வந்துவிடுங்கள். வகுப்பு அப்போது தொடரும்" என்றார்.

மாணவர்கள் வெளியே வந்தார்கள். 'நல்லது செய்ய வேண்டும். என்ன செய்யலாம்' என்று யோசித்தார்கள். சிலர் தங்கள் கையில் உள்ள பணத்தைச் சில்லறைகளாக மாற்றி, யாசகர்களுக்குக் கொடுத்தார்கள். 'உங்களுக்குப் பசிக்கிறதா' என்று கேட்டுச் சிலருக்கு உணவு வாங்கிக் கொடுத்தார்கள். வெற்றுக் காலோடு வந்தவர்களுக்கு சிலர் செருப்பு வாங்கிக் கொடுத்தனர். இப்படி அவர்களால் என்னென்ன நல்லது செய்ய முடியுமோ, அதையெல்லாம் செய்தார்கள்.

ஒரே ஒரு மாணவன் மட்டும் எதுவும் செய்யாமல் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். மாலை நெருங்கியது. அப்போது கடைவீதியில் ஒரு சிறுவன் திருதிருவென விழித்துக்கொண்டு மாணவர்களை நோக்கி ஓடிவந்தான். "நான் எப்படியோ வழிதவறி விட்டேன். வீட்டுக்கு எப்படிப் போவதென்று தெரியவில்லை" என்று கண்கலங்கினான். ஆனால், '4 மணிக்குள் வரவேண்டும்' என்று பேராசிரியர் சொல்லியிருந்ததால், அவனைப் பலரும் கண்டுகொள்ளவில்லை. போய்விட்டார்கள்.

காலையில் இருந்து எதுவும் செய்யாமல் இருந்த மாணவன் மட்டும் அந்தச் சிறுவனிடம் பரிவுடன் விசாரித்தான். அவன் சொன்ன சின்னச்சின்ன தகவல்களை வைத்து அவனைக் கூட்டிப் போய்ப் பத்திரமாக வீட்டில் சேர்த்தான். ஒரு மணி நேரம் தாமதமாகக் கல்லூரிக்கு வந்து, நடந்ததைச் சொன்னான்.

பேராசிரியர் எல்லோரையும் கைத்தட்டச் சொன்னார். பிறகு பேசினார். "நான் நல்லது செய்யுங்கள் என்று மட்டும் சொல்லவில்லை. நல்லதாய் மாறுங்கள் என்றும் சொன்னேன். நீங்கள் அனைவரும் நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், வாய் திறந்து உதவி கேட்காதவர்களுக்கு வலியப் போய் உதவி செய்தீர்கள். அது உங்கள் மனதைத் திருப்திப்படுத்த செய்த காரியம். ஆனால் இவனோ நல்லதாய் மாறியவன். 'உதவி என்று கேட்டவர்க்கு உதவி செய்வதே முதல் கடமை' என்று வகுப்பைப் புறக்கணித்துவிட்டு உதவி செய்தான். 'நல்லது செய்ய வேண்டும்' என்று நினைப்பவர்கள், அவர்களுக்குத் தோன்றும்போது மட்டும் உதவி செய்வார்கள். நல்லதாய் மாறியவர்கள் எப்போதும் பிறருக்கு உதவி செய்வார்கள்."

நல்லதாய் மாறும் மனம் பெற்றவர்களிடம் கனிவு பொங்கிப் பெருகும். தாங்கள் எப்படிப்பட்ட நெருக்கடியான சூழலில் இருந்தாலும், அவர்கள் மற்றவர்களுக்கு உதவி செய்வார்கள். மற்றவர்கள் எப்படிப்பட்ட வலியை அனுபவிக்கிறார்கள் என்பதைத் தங்கள் மனதால் உணர்வார்கள். அடுத்தவர்களின் அனுபவங்களை, உணர்வுகளை, சிந்தனைகளை, அவர்கள் சொல்லாமலே புரிந்துகொள்வார்கள்.

யாரோ ஒருவர் துன்பத்தில் இருப்பது தெரிந்ததுமே, உடனே களத்தில் இறங்கி உதவி செய்வார்கள். தங்கள் மனதில் இருக்கும் உணர்வுகளைத் துல்லியமாக அறிந்துகொண்டு செயல்படுவது போலவே, அடுத்தவர்களின் உணர்வுகளையும் அறிந்துகொண்டு செயல்படுவார்கள். நன்றியையோ, பாராட்டையோ எதிர்பார்த்து எந்த உதவியையும் செய்ய மாட்டார்கள். பிரதிபலன் பார்க்காமல் உதவுவார்கள். ●



# எதிர்பாராததைக் கொடுப்போம்!

விடுமுறையைக் கொண்டாடத் தன் ஐந்து வயதுக் குழந்தையுடன் கடற்கரைக்குப் போனார் ஓர் அம்மா. ஒரு பெரிய பலூனை வாங்கிப் பறக்கவிட ஆசைப்பட்டது குழந்தை. பலூன் விற்ற பெரியவரை அழைத்தார் அம்மா. "ஒரு பலூன் 20 ரூபாய்" என்று சொன்னபடி குழந்தையிடம் கொடுத்தார் பெரியவர். பலூனில் கட்டியிருந்த நூல்கண்டை வளைத்துக் குழந்தையிடம் அக்கறையாகக் கொடுத்தார் அவர். குழந்தை அவருக்கு நன்றி சொல்லிச் சிரித்தது.

அந்தப் பெரியவர் களைப்பில் இருப்பதைக் கவனித்த அம்மா, "என்னங்க, இன்னும் சாப்பிடலையா?" என்று கேட்டார். "வியாபாரம் சரியா இல்லேம்மா" என்று கவலையாகச் சொன்னார் பெரியவர். அம்மா தன் பர்ஸைத் திறந்து, 50 ரூபாயை எடுத்துக் குழந்தையிடம் கொடுத்தார். "தாத்தாவுக்குக் கொடு" என்றார். 'பலூன் 20 ரூபாய்தானே... அம்மா ஏன் 50 ரூபாய் கொடுக்கச் சொல்கிறார்' என்ற குழப்பம் குழந்தைக்கு இருந்தாலும், பணத்தைக் கொடுத்துவிட்டது. தாத்தாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவர் இதை எதிர்பார்க்கவில்லை என்பது அவரின் சிரிப்பிலிருந்து தெரிந்தது. நன்றி சொல்லிவிட்டுப் போனார்.

'பசியிலும் கஷ்டத்திலும் இருக்கும் ஒருவருக்கு உதவிசெய்வது நம் கடமை' என்பது அந்தக் குழந்தைக்குப் புரிந்தது. நாம் அன்பும் கருணையுமாக இருக்கும்போது, உலகமும் நம் மீது அன்பைப் பொழியும்; கருணை காட்டும். இதை ஒரு சிறுவன் கற்றுக்கொண்ட விதம் அழகானது.

ஒரு விடுமுறை நாளில் சைக்கிள் ஓட்டிப் பயிற்சி எடுக்கப் போனான் அவன். வீட்டிலிருந்து கொஞ்சம் தூரம் போனதும் அவன் சைக்கிள் பழுதாகிவிட்டது. அதை நகர்த்திக்கொண்டு அவனால் வர முடியவில்லை. தடுமாறினான். அந்த வழியாகச் சென்ற ஒருவர், உதவிக்கு வந்தார். சைக்கிளைத் தூக்கிக்கொண்டு அவனுடன் நடந்தார். சில நிமிடங்களில் அந்த வழியாக ஒரு ஜீப் வந்தது. அதை ஓட்டியவர், இவர்களைப் பார்த்து ஜீப்பை நிறுத்தினார். சைக்கிளையும் அவர்களையும் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு வந்து, சிறுவனின் வீட்டில் இறக்கிவிட்டார். "மனிதர்கள் எல்லோரும் நல்லவர்கள்" என அப்பாவிடம் உற்சாகமாகச் சொன்னான் சிறுவன்.

அன்று மாலை அம்மா அவனுக்கு பஜ்ஜி சுட்டுக் கொடுத்தார். "எனக்கு இன்னும் கொஞ்சம் பஜ்ஜி வேண்டும்" என்று கேட்டு வாங்கியவன், பஜ்ஜிகளை எடுத்துப் போய் செக்யூரிட்டிக்கும் தோட்டக்காரருக்கும் கொடுத்தான். தான் ஓரிடத்தில் பெற்ற உதவியை இன்னொரு இடத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டும் என அவன் கற்றுக்கொண்டான்.

அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக உலகை மாற்ற, அடுத்தவர்கள் சொல்வதை வெறுமனே காதுகளால் கேட்காமல் மனதாலும் கேளுங்கள். 'இவர் மோசமானவர்', 'இப்படிப் பேசுகிறவர்களை நம்பக்கூடாது' என்று ஒருவரைப் பற்றி நம் மனதில் எழும் கணிப்புகளை ஓரங்கட்டி வைத்துவிட்டு, முழுக் கவனத்துடன் கேளுங்கள். ஒருவர் பேசும் வார்த்தைகளைத் தாண்டி அவர் வெளிப்படுத்தும் உணர்வுகளையும் கவனியுங்கள்.

அடுத்தவர்களின் நிலையிலிருந்து அவர்களின் பிரச்னைகளைப் பாருங்கள். அதே சமயத்தில் உங்கள் கண்களாலும் அதைப் பார்த்துத் தீர்வுகளைத் தேடுங்கள். அரைகுறையாகத் தெரிந்த தகவல்களை வைத்து எவரைப் பற்றியும் முடிவுகள் எடுக்காதீர்கள். இந்த உலகம் கனிவாக மாறும். ●



## கனிவைக் கொடுக்கும் நான்கு வழிகள்!

- ஏதோ ஒரு சூழலில், எந்தத் தகவலும் சொல்லாமலே திடீரென ஒருவர் உங்கள் வீட்டுக்கு வந்தால், “ஒரு போன் பண்ணியிருக்கலாமே” என்று கசப்புடன் சொல்லாதீர்கள். “இப்பதான் உங்களை நினைச்சுக்கிட்டே இருந்தேன். உடனே வந்து நிக்கறீங்க” என்று முக மலர்ச்சியுடன் சொல்லி உரையாடுங்கள். அவரை நீங்கள் முக்கியமாக நினைக்கிறீர்கள் என்பதை இது அவருக்கு உணர்த்தும்.
- சில நேரங்களில் உங்களுக்கு உரிமையான ஒரு பொருளைக்கூட யாரோ ஒரு உறவினர் உரிமை கொண்டாடலாம். விட்டுக் கொடுக்க முடிந்தால் விட்டுக் கொடுங்கள். அதைவிட உயர்ந்த எவ்வளவோ விஷயங்கள் உங்களை வந்து சேரும்.
- சில உறவுகள் ஏதேதோ காரணங்களால் பிரிந்து போக நேரிடலாம். அதை நினைத்து சோகத்தில் மூழ்காதீர்கள். மலை ஏறிச் செல்பவர்கள் தங்கள் சுமைகளைக் குறைத்தால்தான் இன்னும் வேகமாக முன்னேற முடியும். அப்படிப்பட்ட சுமை உங்களிடமிருந்து குறைந்ததாக நினைத்துக்கொள்ளுங்கள்.
- நெருங்கிய உறவினர் ஒருவருக்கு ஏதோ ஒரு தேவை இருப்பது தெரிந்தால், உங்களால் முடிந்த உதவியை அவருக்குச் செய்யுங்கள். உங்களுக்கு வேறொரு தருணத்தில் தேவைப்படும் உதவி, வேறு ஏதேதோ வழிகளால் வந்தடையும். இது ஒரு கனிவுச் சுழற்சிதான்.

## மருந்து தரும் குடும்பம்!

ஒருவர் தனது நலனை விட மற்றவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டும் இடமே குடும்பம். எப்படிப்பட்ட சூழலிலும் அடுத்தவர்களைப் பாதுகாக்க நினைக்கும் இடமே, குடும்பம். நிபந்தனையற்ற அன்பு செலுத்தும் இடமே குடும்பம். உங்களின் மகிழ்ச்சி அடுத்தவர்களைச் சார்ந்திருக்கும் இடமே குடும்பம். யாரைப் பற்றி நினைத்தாலே நிம்மதி ஏற்படுகிறதோ, அவர்களே நம் குடும்பம். நம் கவலைகளுக்கு எல்லாம் எங்கே மருந்து தேட முடிகிறதோ, அதுவே நம் குடும்பம்.



## கனிவால் கூடும் புதுக்குடும்பங்கள்!

பிறப்பால் ஒவ்வொருவருக்கும் ஒரு குடும்பம் அமைகிறது. திருமண உறவால் இன்னொரு குடும்பம் கிடைக்கிறது. இதைத் தாண்டியும் பல குடும்பங்கள் அமைவதுண்டு. ஓர் அலுவலகத்தில் பணிபுரியும் எல்லோரும் குடும்ப உறவுகள் போலப் பழகுவார்கள். அத்தனை அனுசரணை கிடைக்கும் அலுவலகமும் ஒரு குடும்பம் போல ஆகிவிடும். ஒரு நண்பரின் வீட்டில் எல்லோரும் நன்கு பழகுவார்கள். அங்கு போகும்போது, குடும்பத்தினருடன் உறவாடும் இதம் கிடைக்கும். அதுவும் நமக்குக் குடும்பம்தான். இப்படி எந்த இடத்திலும் குடும்பங்கள் உருவாகலாம்.

குடும்பம் என்பது பரஸ்பர அன்பாலும், அக்கறையாலும், நம்பிக்கையாலும் உருவாக்கப்படும் ஓர் உறவு.



## குடும்ப விதிகள்!

- குடும்பத்தில் அனைவரின் பாதுகாப்பும் முக்கியம். உடல்ரீதியாகவும் உணர்வுரீதியாகவும் பாதுகாப்பு தேவைப்படும். அதற்குச் சில விதிகளை வரையறுக்க வேண்டும். குழந்தைகள் ஒருவர்மீது இன்னொருவர் எதையும் வீசி எறிந்து விளையாடக்கூடாது. வெளியில் விளையாட வேண்டிய விளையாட்டுகளை வீட்டுக்குள் ஆடக்கூடாது. குறிப்பிட்ட வயதுவரை பெரியவர்கள் அவர்களைக் கவனித்துக்கொண்டே இருக்க வேண்டும். வீட்டுப் பராமரிப்பு, சமையல் என வேலைகளை வளர்ந்த குழந்தைகள் செய்யும்போது, பெரியவர்களின் கண்காணிப்பு அவசியம்.
- மனக்குழப்பத்தில் ஒருவர் இருப்பதை அவர் முகமே சொல்லிவிடும். ஒவ்வொருவரின் உணர்வையும் கவனிக்க வேண்டும். அவர்களின் குழப்பத்தைத் தீர்த்துத் தோள் கொடுக்க வேண்டும்.
- குடும்பத்தில் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும். கருணையும் அன்பும் மரியாதையும் சரிசமமாகப் பொழியப்பட வேண்டும். ஒருவரை இன்னொருவர் அவமானப்படுத்த அனுமதிக்கக்கூடாது. ஒருவர் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தும் பொருட்களை, அவரிடம் கேட்டே மற்றவர்கள் பயன்படுத்தும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- வீட்டைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்துக்கொள்ள எல்லோரும் இணைந்து செயல்பட வேண்டும். காலையில் தூங்கி எழுந்ததும் படுக்கை விரிப்பைச் சரிசெய்வது தொடங்கி, இரவு சாப்பிட்ட பிறகு டைனிங் டேபிளைச் சுத்தமாக்குவது வரை எல்லாவற்றிலும் குடும்பத்தினர் அனைவரது பங்கும் இருக்கிறது. அதேபோல ஒவ்வொருவரும் தங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதும் முக்கியம்.
- எது சரி, எது தவறு என்று பிரித்துப் பார்த்து முடிவெடுக்கும் பண்பைக் குழந்தைப் பருவத்திலேயே உருவாக்குங்கள். அனைவரிடமும் கனிவாக நடந்துகொள்வது தொடங்கி, குடும்பத்தில் எல்லோரிடமும் உண்மையாக இருப்பது வரை குறிப்பிட்ட நற்பண்புகளே குடும்ப உறவை இனிமையாக மாற்றும்.

## தாங்கி நிற்கும் குடும்பம்!



உள்ளூரில் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டுப் பெருநகரத்துக் கல்லூரி ஒன்றில் சேர்ந்திருந்தான் ஓர் இளைஞன். முதல்முறையாக வீட்டை விட்டுப் பிரிந்துவந்து ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறான். அவனால் இந்தப் பிரிவைத் தாங்க முடியவில்லை. கல்லூரியிலும் ஹாஸ்டலிலும் செல்போன் வைத்திருக்க அனுமதி இல்லை. அங்கே இருக்கும் லேண்ட்லைன் போனுக்கு வீட்டிலிருந்து போன் வந்தால், கூப்பிட்டுச் சொல்வார்கள்.

ஹாஸ்டலில் இருக்கும் சக மாணவர்களுக்கு அவர்களின் அப்பாவும் அம்மாவும் தினமும் போன் செய்து நலம் விசாரிப்பார்கள். இவனுக்கோ வாரத்தில் ஒரு நாள் மட்டுமே போன் அழைப்பு வரும். நம் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நம் மீது அன்பே இல்லை என அவன் நினைத்தான்.

ஆனால், அவனுக்கு எதெல்லாம் தேவையோ, அவை எல்லாவற்றையும் சரியாக அனுப்பி வைப்பார்கள். ஏதாவது மனக்குழப்பத்தில் இருக்கும்போது அப்பா பேசி வழிகாட்டுவார். பிரச்னையில் தவிக்கும்போது அம்மா ஆறுதல் சொல்வார். “நீ சுதந்திரமாக முடிவுகள் எடுத்துப் பழக வேண்டும் என்பதற்காகத்தான் அடிக்கடி பேசவில்லை. அப்படிப் பேசியிருந்தால், நாங்கள் சொல்வதை மட்டுமே கேட்டுச் செயல்படும் ஒருவனாக ஆகியிருப்பாய்” என்று அப்பா சொன்னபோதுதான் அவனுக்கு உண்மை உறைத்தது.

தூரம் எவ்வளவு இருந்தாலும், குடும்பம் தாங்கி நிற்கும்.



# கனிவான பிறவி எடுங்கள்!

வறண்ட கிராமம் ஒன்றில் இரண்டு விவசாயிகள் வாழ்ந்து வந்தார்கள். வானம் பார்த்த பூமியில் சிரமப்பட்டு விவசாயம் செய்து பிழைப்பு நடத்தினார்கள். இருவரும் ஒரே நாளில் மறைந்து சொர்க்கத்துக்குப் போனார்கள். கடவுள் அவர்களைக் கனிவுடன் அழைத்து, "ஒரு பிறவியை வாழ்ந்து முடித்துவிட்டு இங்கு வந்திருக்கிறீர்கள். அந்தப் பிறவியில் எவை எல்லாம் உங்களுக்குக் கிடைக்கவில்லை என ஏங்குகிறீர்கள்?" என்று கேட்டார்.

முதல் விவசாயி உடனே புலம்ப ஆரம்பித்துவிட்டார். "கடவுளே! நான் வாழ்ந்ததெல்லாம் ஒரு வாழ்க்கையா? எங்கள் வயலில் மாடு மாதிரி உழைத்தேன். ஆனால், சரியாக மழை பெய்யாது, விளைச்சல் இருக்காது. எங்கள் குடும்பத்தில் எல்லோரும் வயிறாரச் சாப்பிடும் அளவுக்குக்கூட வருமானம் கிடைக்காது. நல்ல உடை இல்லை, சரியான வீடு இல்லை, எந்தப் பொழுதுபோக்கும் இல்லை'' என்று ஏகப்பட்ட குறைகளைச் சொல்லி அவர் கடவுளையே குற்ற உணர்வுக்கு ஆளாக்கிவிட்டார்.

கடவுள் அவரைக் கூர்ந்து பார்த்து, "சரி, அடுத்த பிறவியில் நீங்கள் என்ன மாதிரி வாழ்க்கையை எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார். "யாருக்கும் எதுவும் கொடுக்க வேண்டிய நிலையில் என்னை வைக்காதீர்கள். நான் கேட்டால் எல்லோரும் பணம் கொடுக்க வேண்டும், ஆனால் நான் யாருக்கும் கொடுக்கக்கூடாது" என்றார் அந்த விவசாயி.

கடவுள் அதன்பின் இரண்டாம் விவசாயி பக்கம் திரும்பி, ''உங்களுக்குக் கடந்த பிறவியில் என்ன கிடைக்கவில்லை?" என்று கேட்டார். அவர் கடவுளைக் கரம் கூப்பித் தொழுது, ''கடவுளே! நீங்கள் எனக்கு எல்லாம் கொடுத்தீர்கள். நல்ல குடும்பம், வருமானம் தருவதற்குக் கொஞ்சம் நிலம், அதில் உழைப்பதற்குத் தேவையான உடல் வலிமை என எல்லாம் கொடுத்தீர்கள். என்னால் கடினமாக உழைத்து என் குடும்பத்தின் பசி தீர்க்க முடிந்தது. எனக்கு ஒரே ஒரு வருத்தம் மட்டும்தான்! பசி என்று என் வீட்டுக்கு வந்தவர்களுக்கு என்னால் உணவு தர முடிந்ததில்லை. என் குடும்பம் சாப்பிடவே போதுமான உணவு இருந்ததில்லை" என்றார்.

கடவுள் அவரிடமும், ''அடுத்த பிறவியில் என்ன மாதிரி வாழ்க்கையை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டார். "என் வீட்டுக்கு வருகிற யாரும் பசி தீராமல் திரும்பிப் போகவே கூடாது. அப்படிப்பட்ட வாழ்க்கை போதும் கடவுளே" என்றார் அவர்.


கடவுள் அந்த இருவரையும் வளமான இன்னொரு ஊரில் மீண்டும் பிறக்கச் செய்தார். முதல் விவசாயி வளர்ந்து பெரிதானதும் ஒரு யாசகனாக மாறினார். அவருக்கு எல்லோரும் பணம் கொடுத்தார்கள், யாருக்கும் அவர் பணம் தர வேண்டிய சூழல் இல்லாமல் போனது. இரண்டாவது விவசாயி, அந்த ஊரிலேயே மிகப்பெரிய பணக்காரர் ஆனார். 'இல்லை' என்று வருபவர்கள் எல்லோருக்கும் அவர் கொடுக்கக் கொடுக்க, கடவுள் அருளால் அவரிடம் செல்வம் சேர்ந்துகொண்டே வந்தது.

ஒரே மாதிரி சூழலில் வாழ்ந்த இருவரும் தங்கள் வாழ்க்கையை எந்தக் கோணத்தில் பார்த்தனர் என்பதன் அடிப்படையில் அவர்கள் வாழ்வு மாறியது. கனிவு எப்போதும் ஒருவரின் வாழ்வையே மாற்றக்கூடியது. கனிவு என்பது, அடுத்தவர்களின் வலியை உணர்வது, அதைப் போக்கச் செயலில் இறங்குவது. 'கனிவு' என்பதைக் குறிக்கும் 'Compassion' என்ற வார்த்தை லத்தீன் மொழியிலிருந்து வந்தது. அதன் அர்த்தமே, 'இணைந்து வலியை அனுபவிப்பது' என்பதுதான்!

அடுத்தவர்களின் துன்பத்தை, வலியைத் துடைக்க முயலும்போது நமக்குச் சமூகத்துடன் ஆழமான பிணைப்பு உருவாகிறது. உறவுகளை இது வலிமையாக்கும், மன அழுத்தத்தைக் குறைக்கும், மகிழ்ச்சியை அதிகரிக்கும். கனிவான மனிதர்களால், அடுத்தவர்களின் துயரங்களை அவர்கள் சொல்லாமலே புரிந்துகொள்ள முடியும். ஒருவரின் முகத்தைப் பார்த்தே, அவரது மனவேதனையை அறிந்துகொள்ள முடியும்.

**கனிவுடன் ஒருவரை அணுகும்போது சில அடிப்படையான விஷயங்களை மறக்காதீர்கள்:**

- துன்பத்தில் இருக்கும் ஒருவரின் கண்களைப் பார்த்துப் பேசுங்கள். அப்போதுதான் அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். நம் பிரச்னையை இவர் அக்கறையாகக் கேட்கிறார் என்ற உணர்வை ஏற்படுத்த முடியும்.
- நம் முகத்தில் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளும் முக்கியமானவை. நமக்குச் சாதாரணமாகத் தெரியும் ஒரு விஷயம், அவருக்குப் பெரிய பிரச்னையாகத் தோன்றலாம். அதற்காக 'இதெல்லாம் ஒரு பிரச்னையா' என்பது போல அலட்சியமான முகபாவத்தை வெளிப்படுத்தக்கூடாது. கவனமாக உணர்வுகளைக் காட்ட வேண்டும்.
- அலட்சியமாகக் கால் மேல் கால் போட்டுச் சாய்ந்து உட்கார்ந்தபடி உரையாடுவது தவறு. அக்கறையாக முன்புறம் குனிந்து, கைகளைப் பற்றிக்கொண்டு பேசலாம். அவர்மீது பரிவு காட்டும் அதே நேரத்தில், நாம் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டும்.
- அவர்கள் சொல்வதை முழுமையாகக் கவனிக்க வேண்டும். கவனத்தை வேறு எந்தப் பக்கமும் திசை திருப்பாமல், அக்கறையாகக் கேட்க வேண்டும். கேள்விகள் கேட்டு உரையாடும்போது, 'நாம் சொல்வதை இவர் கேட்டுத் தீர்வு சொல்வார்' என அவர்களுக்கும் நம்பிக்கை ஏற்படும்.
- பேசும் தொனியும் முக்கியம். பிரச்னையில் இருக்கும் ஒருவர், ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் புலம்பலாம். அதற்காக எரிச்சலோ, கோபமோ அடையாமல் பேச வேண்டும். மென்மையான நம் குரலே அவருக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிக்க வேண்டும்.
- அவர்களுடன் உணர்வுரீதியாக இணைவது முக்கியம். ஒரு பிரச்னையில் இருப்பவருக்குத் தேவை தீர்வும் ஆறுதலும்தான்! அதைக் கொடுத்து அவர்களைத் தேற்றுவதைவிடச் சிறந்த விஷயம் வேறு இல்லை. ●



# வாசகர் கடிதங்கள்

**வெ**ண்மை இதழ்கள்
வெளிச்சம் தருகிறது!
அன்பின் அருமையை
அடிக்கடி படித்தேன்!
தன்னம்பிக்கை இதழால்
தளர்ச்சி மறைந்தது!
உறவுகள் மேம்படவோ
உணர்ச்சிகளைத் தந்தது!
நன்மதிப்பு படித்து
நரம்புகள் துடிக்கிறது!
உளவியலை வளர்க்கும்
உள்ளங்கள் வாழ்க!
நல்லவற்றைச் செய்யும்
நாகராஜர் வாழ்க, வாழ்க!

***– ச.நாச்சியப்பன், மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை மாவட்டம்.***

**'வெ**ண்மை' நன்மதிப்பு சிறப்பிதழ் படித்தேன். எல்லா வயதினருக்கும் ஏற்ற நல்ல பல கருத்துகளைத் தாங்கிய பொக்கிஷமாக அது மின்னியது. ராம்ராஜ் காட்டனுக்கு நன்றி!

***– இரா.சீனிவாசன், மேற்கு மாம்பலம், சென்னை–33.***

**'வெ**ண்மை' நன்மதிப்பு சிறப்பிதழின் கடிதம் பகுதியில், 'மதிப்பைத் தேடித்தரும் நல்ல எண்ணங்களும், நல்ல செயல்களும் நம் பிள்ளைகளுக்கு எப்போதும் பாதுகாப்பு அரண்களாக விளங்கும்' என்று ராம்ராஜ் காட்டன் நிறுவனர் கே.ஆர்.நாகராஜன் கூறியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை.

***– எஸ்.மேகலா, திருவாரூர்.***




# உதவி செய்தால் உயரலாம்!

சிறிய தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்துவந்தார் மகேஷ். வாகன உதிரிபாகங்களை உருவாக்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் நிறுவனம் அது. 20 தொழிலாளர்கள் மட்டுமே வேலை பார்த்து வந்தனர். எல்லோருக்குமே நியாயமான சம்பளம் கிடைக்கும் அளவுக்கு உற்பத்தி இருந்தது.

திடீரென சர்வதேசப் போர்ச்சூழல்களால் அந்த நிறுவனத்தின் ஏற்றுமதி குறைந்தது. சிறிய நிறுவனம் என்பதால், இந்த இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தடுமாறினார் முதலாளி. 'வாரம் முழுக்க எல்லோருக்கும் வேலை தரக்கூடிய வாய்ப்பு இல்லாததால், வாரத்தில் சில நாட்கள் மட்டுமே வேலைக்கு வரச் சொல்லலாம்' என்ற யோசனையைச் சொன்னார் மேனேஜர். அதன்படி எல்லோருக்குமே வாரத்தில் நான்கு நாட்கள் மட்டுமே வேலை, அதற்கு மட்டுமே சம்பளம் என்றானது.

ஆனால், ஏற்றுமதி இன்னும் மோசமடைந்தது. யாராவது சில தொழிலாளிகளுக்கு நீண்ட விடுப்பு கொடுத்தால்தான் சமாளிக்க முடியும் என்ற நிலை. சீனியாரிட்டி பார்த்து, கடைசியாக வேலைக்கு வந்தவரை அனுப்பலாம் என்றால் அதற்கும் வாய்ப்பு இல்லை. அந்த 20 பேருமே, புதிதாகச் சில ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்த அந்த நிறுவனத்தில் ஒரே நாளில் வேலைக்குச் சேர்ந்தவர்கள்.

வேறு வழியின்றி மேனேஜர் அவர்களை அழைத்துப் பேசினார். யாரும் விடுப்பில் செல்ல முன்வராத நிலையில், மகேஷ் தன் கையை உயர்த்தினார். ''நான் போயிட்டா, என் சக தொழிலாளிகளுக்கு வேலையும் சம்பளமும் கிடைக்கும்னா, நான் தாராளமா போறேன்'' என்றார். விடுப்பில் சென்ற மகேஷ், சில பட்டறைகளில் வேலை பார்த்து நாட்களைக் கடத்தினார். தொழிற்சாலையில் கிடைத்த சம்பளம் அளவுக்கு வருமானம் இல்லை என்றாலும், ஓரளவுக்குச் சமாளிக்க முடிந்தது. ஐந்தாறு மாதங்கள் கடந்தன. தொழிற்சாலையின் நிலவரம் முன்பைவிட மோசமாகிவிட்டதாகத் தகவல் வந்தது. அங்கிருந்த மேனேஜரும் வேலையை விட்டுப் போய்விட்டதாகச் சொன்னார்கள். தன் சக தொழிலாளிகளை மகேஷ் சந்திப்பதும் குறைந்து போனது.

திடீரென மகேஷுக்கு ஒருநாள் போனில் அழைப்பு வந்தது. ஒரு பெரிய தொழிற்சாலையில் இன்டர்வியூவுக்கு வரச் சொன்னார்கள். உதிரிபாகங்கள் தயாரிப்பில் புகழ்பெற்ற நிறுவனம் அது. அங்கு வேலை கிடைக்காதா என்று ஒரு காலத்தில் மகேஷ் ஏங்கியதுண்டு. ஆனால், விண்ணப்பமே போடாமல் இப்போது இன்டர்வியூவுக்குக் கூப்பிடுகிறார்களே என்று ஆச்சர்யம் ஏற்பட்டது. அந்த ஆச்சர்யத்துடன் மகேஷ் போனபோது, அவரை இன்டர்வியூ செய்தவர், அவரது முன்னாள் மேனேஜர்.

''நீங்க நல்லா வேலை செய்வீங்கன்னு எனக்குத் தெரியும். சக தொழிலாளிகள் மேல அக்கறை காட்டி நீங்க விடுப்பில் போனது எனக்குப் பிடிச்சிருந்தது. அப்படி அக்கறையான ஒருத்தர் சூப்பர்வைசரா இருந்தா, தொழிலாளிகள்கிட்ட கனிவா பேசி வேலை வாங்க முடியும். அதனால்தான் நான் இங்க வேலைக்குச் சேர்ந்ததும் முதல் ஆளா உங்களைக் கூப்பிட்டேன்'' என்று சொன்ன அந்த மேனேஜர், முன்பு மகேஷ் வாங்கியதைவிட இரண்டு மடங்கு சம்பளத்தில் அவருக்கு வேலைவாய்ப்புக்

கொடுத்தார். கனிவாக இருந்தால் உயர்வு கிடைக்கும் என்பதைப் புரிந்துகொண்டார் மகேஷ்.

‘அடுத்தவர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என ஆசைப்பட்டால், கனிவு காட்டுங்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க ஆசைப்பட்டாலும், கனிவு காட்டுங்கள்’ என்று தலாய் லாமா சொன்னார். கனிவு நிரம்பியிருக்கும் பணியிடங்களில் ஊழியர்கள் அடிக்கடி வேலையை விட்டுச் செல்ல மாட்டார்கள், உற்சாகமாக வேலை பார்ப்பார்கள், ஒருவர் இன்னொருவருக்கு ஆர்வத்துடன் கற்றுக்கொடுப்பார், குழுவாக இணைந்து வேலை பார்ப்பதில் யாருக்கும் தயக்கம் இருக்காது, உற்பத்தியும் லாபமும் அதிகரிக்கும்.

**பணியிடத்தில் கனிவு காட்ட, சில விஷயங்களை மறக்காமல் பின்பற்றுங்கள்:**

● கண்களையும் மனதையும் திறந்து வைத்துக்கொண்டு அடுத்தவர்களைக் கவனியுங்கள். அவர்களின் பிரச்னைகள், வலிகள், நெருக்கடிகள், குழப்பங்களை உங்களால் உணர முடியும். அதற்கெல்லாம் தீர்வுகளும் தந்து அவர்களை மீட்க முடியும்.

● அடுத்தவர்கள் ஒரு செயலைச் செய்யும்போதோ, ஏதாவது சொல்லும்போதோ, எதிர்மறையான ரீயாக்ஷன்கள் செய்வதைத் தவிர்த்துவிடுங்கள். யாரோ ஒருவர் ஒரு விஷயத்தைச் சொல்லும்போது, அதை அவர் ஏன் சொல்கிறார் என்ற பின்னணியை விசாரியுங்கள். அது தெரியாமல் அந்தப் பேச்சுக்குக் கோபமாக ரீயாக்ட் செய்தால் உறவு மோசமடையும்.

● அடுத்தவர்களின் சின்னச்சின்ன சாதனைகளையும் பாராட்டக் கற்றுக்கொள்ளுங்கள். மனம்திறந்து பாராட்டும்போது, மற்றவர்கள் ஊக்கம் பெறுகிறார்கள். அது அவர்களை இன்னும் உற்சாகமாக வேலைகளைச் செய்ய வைக்கும்.

● பலர் தங்கள் தேவைகளை வாய்திறந்து சொல்லத் தயங்குவார்கள். அவர்களிடம் கேளுங்கள். அப்படித் தேவை உள்ளவர்களை முகபாவங்களை வைத்தே கண்டுபிடிக்கும் திறன் உங்களுக்கு வந்துவிட்டால், நீங்கள் கனிவு காட்டுவதில் சிறந்தவர்.

● வார்த்தைகளைக் கவனமாகப் பயன்படுத்துங்கள். உங்களின் பேச்சுகள் எல்லாமே, அடுத்தவர்களின் குழப்பங்களுக்குத் தெளிவு தருவதாகவும், அவர்களின் காயங்களுக்கு மருந்து போடுவதாகவும் மட்டுமே இருக்கட்டும். அவர்களைக் காயப்படுத்தக்கூடாது.

● எல்லோருக்கும் கனவுகள், இலக்குகள், திட்டங்கள் இருக்கும். அவர்கள் கற்றுக்கொள்ளவும், தங்கள் பரிசோதனைகளுக்கு வடிவம் கொடுக்கவும் உதவுங்கள். அவர்களுக்கு எல்லாச் சூழல்களிலும் ஆதரவாக நில்லுங்கள்.

● பணியிடத்தில் சக ஊழியர்களுடன் எப்போதும் தொடர்பில் இருங்கள். அவர்களுடன் நிகழ்த்தும் உரையாடல்களில் உங்கள் அக்கறை வெளிப்பட வேண்டும். பொறுமையும் கனிவும் உங்கள் அணுகுமுறையில் இருக்க வேண்டும்.

● ஒரு வேலையைப் பாராட்டுவது, ஒரு நெருக்கடியான நேரத்தில் கருத்துச் சொல்வது, ஒருவர் வேலையில் தடுமாறும்போது கைகொடுத்து உதவுவது போன்ற நற்செயல்களை யாரும் கேட்பதற்கு முன்பாக நீங்களாகவே சென்று செய்யுங்கள். ‘யாரிடம் கேட்பது’ என்று தயங்கி நிற்கும் பலருக்கும் இது மிகப்பெரிய ஆசுவாசத்தைக் கொடுக்கும். ●


**வெண்மை சந்தா...**

# மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)



# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் மகிழ்ச்சியா?

மக்கள் அனைவரின் நலனிலும் அக்கறை காட்டுபவனாக ஒரு மன்னன் இருந்தான். ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையுடன் வழிபாடுகளும் செய்வான். அவனது பக்தியில் மகிழ்ந்த கடவுள் ஒருநாள் அவனுக்குக் காட்சி தந்தார். ''உனக்கு ஒரு வரம் தருகிறேன். என்ன வேண்டும், கேள்'' என்றார். கடவுளுக்கு நன்றி சொன்ன மன்னன், “நாட்டு மக்கள் எல்லோருக்கும் நன்மை தரும் விதமாக வரம் கேட்க விரும்புகிறேன். எனக்கு யோசிக்க கொஞ்ச நேரம் கொடுங்கள்” என்றான். கடவுளும் சம்மதித்தார்.

அரண்மனைக்குத் திரும்பிய மன்னன், சில அமைச்சர்களைக் கூப்பிட்டு ஆலோசனை கேட்டான். ''எல்லா மக்களும் நினைப்பதெல்லாம் நிறைவேற வேண்டும் என வரம் கேட்கலாம் மன்னா! அப்போது எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்'' என்றார் ஓர் அமைச்சர். இது மன்னனுக்குப் பிடித்திருந்தது. நேராக கோயிலுக்கு ஓடிச் சென்று வரம் கேட்டான். கடவுளும் கொடுத்தார்.

அந்த நிமிடத்திலிருந்து நாடு முழுக்கப் பல அதிசயங்கள் நிகழ்ந்தன. வறண்ட நிலங்கள் எல்லாம் செழிப்பான வயல்களாக மாறின. குடிசைகள் திடீரென மாளிகைகளாக உருவெடுத்தன. முதிய வயதில் இருந்த பலர் திடீரென இளைஞர்களாக மாறினார்கள். அப்படி மாறியவர்களின் மனைவியரும் இளம்பெண்களாக மாறினர். அலமாரியில் இருந்த சாதாரண கல் பதித்த நகைகள் அனைத்தும் வைர நகைகளாக மாறின. சிலர் இறக்கைகள் முளைத்து பறக்கத் தொடங்கினர்.

‘தாங்கள் மனதில் நினைக்கும் ஆசைகள் எல்லாமே நிறைவேறுகின்றன’ என்ற உண்மையை எல்லோரும் சீக்கிரமே புரிந்துகொண்டார்கள். எல்லோரும் நிறைய நிறைய ஆசைப்பட்டார்கள். ஒரே நாளில், அந்த நாட்டில் ஏழைகளே இல்லை என்ற நிலை வந்துவிட்டது.

ஆனால், அதன்பின் நடந்ததுதான் விபரீதம்! தங்களைப் போலவே மற்றவர்களும் பணக்காரர்கள் ஆனது நிறைய பேருக்குப் பிடிக்கவில்லை. ‘என் பக்கத்து வீட்டுக்காரனின் மாளிகை இடிந்துவிழ வேண்டும்’ என ஒருவர் நினைத்தார். ‘என் எதிரிக்கு குணப்படுத்த முடியாத நோய் வர வேண்டும்’ என இன்னொருவர் நினைத்தார். ‘என்னைவிட அறிவாளியாக இருக்கும் என் உறவினர் மனநோயாளியாக மாற வேண்டும்’ என ஒருவர் ஆசைப்பட்டார். மக்கள் வலியிலும் வேதனையிலும் தவித்தனர். நாடு அமைதி இழந்தது.

மன்னனின் கதி என்ன ஆனது தெரியுமா? இப்படி ஒரு வரம் கேட்குமாறு யோசனை சொன்ன அமைச்சர் மோசமான மனிதர் என்பது பிறகுதான் மன்னனுக்குத் தெரிந்தது. ‘மன்னன் பிச்சைக்காரனாக மாற வேண்டும். நான் மன்னனாக வேண்டும்’ என அந்த அமைச்சர் ஆசைப்பட்டார். அது உடனே நடந்தது. பிச்சைக்காரனாக மாறிய மன்னனைக் கொல்வதற்கு அமைச்சர் ஆட்களை அனுப்ப, அவன் தப்பித்துச் சென்றான்.

ஒரு துறவியைச் சந்தித்த மன்னன், நடந்த எல்லாவற்றையும் சொன்னான். ''எல்லோரும் நினைப்பதெல்லாம் நடப்பது போல, நீ நினைப்பதும் நடக்கும் அல்லவா? ‘இந்த வரம் செயலிழந்து போக வேண்டும்’ என நினை. எல்லாமே பழைய நிலைக்கு மாறும்” என்றார் துறவி. மன்னன் நினைக்க, அப்படியே நிகழ்ந்தது.

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் மட்டும் மகிழ்ச்சி கிடைக்காது. நடப்பதில் கனிவு இருந்தால் மட்டுமே மகிழ்ச்சி நிலைக்கும். ●



# பற்றிக்கொள்ளும் கரங்கள்!

ஆசிரியருக்கு ஒருநாள் எதிர்பாராதவிதமாக அவசரமான அலுவலகப் பணி வந்துவிட்டது. வகுப்புக்குள் வந்தவர், "நீங்க எந்த ஒரு விஷயத்துக்கு நன்றி சொல்ல நினைக்கிறீங்களோ, அதை ஓவியமா வரைங்க'' என்று சொல்லிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து தன் வேலைகளில் மூழ்கினார். மாணவர்கள் அமைதியாக வரைய ஆரம்பித்தனர்.

அரை மணி நேரம் கழித்து எழுந்து நடந்தபடி எல்லோரது ஓவியங்களையும் பார்த்தார். அம்மா, அப்பா, கடவுள், சூரியன், வயல்வெளி, விவசாயி, டாக்டர், போலீஸ்காரர் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு உருவத்தை வரைந்துகொண்டிருக்க, சிவா மட்டும் வித்தியாசமாக வரைந்திருந்தான். அவனது பேப்பரில் ஒற்றைக் கரம் மட்டுமே இருந்தது. வெறுமனே ஒரு கை. ஆசிரியருக்குக் குழப்பம். அது யாருடைய கையாக இருக்கும்? கடவுளின் கை? பெற்றோரின் கை? அல்லது டாக்டரின் கை?

அவனிடமே போய், "இது யாருடைய கை?" என்றார். "உங்களுடைய கை சார்" என்றான் சிவா. "பல நாள் எங்களைக் கைப்பிடித்து அழைத்துப் போயிருக்கிறீர்கள். கைப்பிடித்து எழுதக் கற்றுத் தருகிறீர்கள். நாங்கள் படிப்பது உங்களால்தான். அதை நன்றியுடன் நினைக்கவே, உங்கள் கையை வரைந்தேன்'' என்று சிரித்தபடி சொன்னான் சிவா. ஆசிரியர் அன்று தன் மதிப்பைக் கற்றுக்கொண்டார்.

பள்ளியிலிருந்து அழுதபடி வந்தான் 10 வயது சிறுவன். ''என்ன விஷயம்?'' என்று கேட்டார் அப்பா. "எனது பணக்கார வகுப்புத் தோழர்கள் என் இயலாமையை, வறுமையைக் கேலி செய்கின்றனர்'' என்றான்.

அப்பா யோசித்தார். "அந்தக் கவலையை மறக்க என்னுடன் வா. தோட்டத்தில் சில விதைகளை நடுவோம்" என்று அவன் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். ஆளுக்குக் கொஞ்சம் விதைகளை உற்சாகமாக நட்டார்கள். "ஒரு பரிசோதனையைச் செய்வோம். நான் நட்ட விதைகளுக்கு குழாயிலிருந்து நல்ல தண்ணீர் பிடித்துவந்து ஊற்றுகிறேன். நீ நட்ட விதைகளுக்கு குளத்திலிருந்து அழுக்குத் தண்ணீர் கொண்டுவந்து ஊற்று. என்ன ஆகிறது என்று பார்ப்போம்" என்றார் அப்பா.

அவர்கள் தண்ணீர் ஊற்றி வந்தார்கள். கொஞ்ச நாட்களில் அவற்றில் சில செடிகள் நன்கு பூத்தன. வெண்டைக்காயும் கத்தரிக்காயும் சில செடிகளில் காய்த்துத் தொங்கின. மகனைத் தோட்டத்துக்கு அழைத்த அப்பா, "என்ன வித்தியாசம் தெரிகிறது?" என்று கேட்டார். மகன் உற்றுப் பார்த்துவிட்டு, "நீங்கள் நல்ல தண்ணீர் ஊற்றினீர்கள். நான் அழுக்குத் தண்ணீர் ஊற்றினேன். ஆனாலும், நான் நட்ட செடிகளில் பூக்கள் பெரிதாகப் பூத்திருக்கின்றன. காய்கறிகளும் பெரிதாகக் காய்த்திருக்கின்றன. இது எப்படி சாத்தியம்?" என்று கேட்டான்.

தந்தை சிரித்தார். ''ஏனென்றால், அழுக்கு நீர் ஒரு செடியின் வளர்ச்சியைத் தடுக்காது. மாறாக, அது செழிக்கவே உதவும். வாழ்க்கையில் உன்னைத் தாழ்த்திப் பேசுபவர்கள், உன் மீது அழுக்கை வீசுபவர்கள் சிலர் இருக்கிறார்கள். தங்கள் கெட்ட எண்ணத்தை வெளிப்படுத்தவே அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். அவை உன்னைப் பாதிக்கக்கூடாது. அவற்றை உரமாக்கிக்கொள். அப்படிச் செய்தால், நீ சிறந்தவனாக மாறுவாய்'' என்றார். மகன் அன்று வாழ்க்கைப்பாடம் கற்றான்.

# குடும்ப உறவுகளில் கனிவு பரவட்டும்!



கண்டிப்பான அம்மாவைக் கண்டு ஒரு குடும்பத்தில் எல்லோருமே நடுங்குவார்கள். அப்பாகூட எதையும் தன் மனைவியிடம் சொல்வதற்குப் பயப்படுவார். ஒருநாள் அவர், ‘‘நாளைக்கு நான் நண்பர்களுடன் வெளியூர் போக வேண்டும்’’ என்றார். வழக்கமாக இப்படி அவர் சொன்னாலே, “உங்களுக்குக் குடும்பத்து மேல அக்கறையே இல்லை. கல்யாணம் முடிஞ்சு இத்தனை வருஷங்கள் ஆகியும் நண்பர்களோட ஊர் சுத்தறீங்க” என்று சண்டை பிடிப்பார். இன்றைக்கோ, “போயிட்டு வாங்க” என்று தயக்கமின்றிச் சொன்னார்.

மகன் வந்து, “காலேஜ் தேர்வில் என் மதிப்பெண்கள் இந்த முறை நிறைய குறைந்துவிட்டது’’ என்றான். எப்போதும் அவனுக்கு மார்க் குறைந்தால் கொந்தளிப்பவர், இன்று “கவனமாகப் படித்து அடுத்த தேர்வில் நல்ல மார்க் எடு. இல்லாவிட்டால் எதிர்காலத்தில் நீதான் சிரமப்படுவாய்’’ என்றார். மகன் திகைத்து நின்றான். மகள் கல்லூரி முடிந்து வரும்போது தன் ஸ்கூட்டரை சாலையோர மரத்தில் மோதிவிட்டாள். வாகனத்துக்குப் பெரும் சேதம். பயந்துகொண்டே வந்து அம்மாவிடம் சொன்னபோது, “கவனமா இரு. வண்டியை சர்வீஸுக்கு விட்டுடு! உனக்கு ஒண்ணும் அடி இல்லையே” என்று விசாரித்தார்.

அப்பா, மகன், மகள் மூன்று பேருமே குழம்பி, “அம்மா, உனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி அமைதியா மாறிட்டே’’ என்று விசாரித்தார்கள். அம்மா சிரித்தார். பிறகு பேசினார். ‘‘ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் அவரவரே பொறுப்பு. என் கோபமோ, வருத்தமோ, பதற்றமோ, உங்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதில்லை. ஆனால், என் பிரச்னைகளை அதிகமாக்கிவிடுகின்றன. நான் ஆலோசனைகளை மட்டுமே சொல்லலாம். முடிவெடுப்பது நீங்கள்தான். அந்த முடிவின் லாப, நஷ்டங்களை நீங்கள்தான் அலசிப் பார்த்துச் செயலில் இறங்க வேண்டும். நான் உங்கள் மீது அளவற்ற அன்பைக் காட்டலாம். ஆனால், உங்கள் வாழ்வின் முடிவுகளை நீங்கள்தான் எடுக்க வேண்டும். இதைப் புரிந்துகொண்டதால் நான் அமைதியாகிவிட்டேன்’’ என்றார் அம்மா. எல்லோரும் புரிந்துகொண்டனர்.

‘குடும்பம்’ என்பதும், ‘அன்பு’ என்பதும் வேறு வேறு வார்த்தைகளாக இருக்கலாம். ஆனால், இரண்டும் இணையும்போதுதான் அந்தக் குடும்பத்துக்கு முழுமையான அர்த்தம் கிடைக்கிறது. குடும்பம் என்பது வெறுமனே ஒரு வீட்டுக்குள் வாழும் பெற்றோரும் பிள்ளைகளும் மட்டுமில்லை! அவர்களின் தொப்புள்கொடி உறவுகளும் வம்சாவளி உறவுகளும்கூடக் குடும்பத்தின் அங்கம்தான். உரிமையுடன் வீட்டுக்கு வந்து நெருக்கமாகப் பழகும் நண்பர்களைக் ‘குடும்ப நண்பர்கள்’ என்கிறோம். அவர்களுமே நம் குடும்பத்தில் அங்கம் வகிப்பவர்கள்தான்!

குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் இடையில் பரஸ்பரம் நேசம், மரியாதை, பிணைப்பு மற்றும் விசுவாசத்தின் வெளிப்பாடாக அன்பு பெருகுகிறது. அதனால்தான் மற்ற எல்லா உறவுகளையும்விடக் குடும்ப உறவுகளில் அன்பு அதிகமாக வெளிப்படுகிறது. நம் குடும்பத்தை நாம் தேர்வு செய்வதில்லை. நம் பெற்றோரும், நமக்குப் பிறக்கும் குழந்தைகளும்

இறைவன் நமக்கு அளிக்கும் அன்புப் பரிசுகள். நாம் எப்படிப்பட்டவராக வளர வேண்டும் என்று பெற்றோர்கள் வழிகாட்டுகிறார்கள். நம் பிள்ளைகளை நற்பண்புகளுடன் நாம் வழிநடத்துகிறோம்.

### குடும்ப உறவில் அன்பும் கனிவும் நிலைத்திருக்க, நாம் செய்ய வேண்டியது என்னென்ன?

- வீடு பெரிதாகவும் இருக்கலாம், சிறியதாகவும் அமையலாம். அந்த வீட்டுக்குள் சக குடும்பத்தினர்களுடன் அனுசரித்து வாழ வேண்டும். அங்கு பல விஷயங்களை அனைவரும் பகிர்ந்துகொள்ளலாம். அதே சமயம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட அந்தரங்க நேரத்தை



மதித்தும் நடந்துகொள்ள வேண்டும். பிள்ளைகள் படிக்கும்போது டி.வி பார்க்காமல் தவிர்ப்பது, குழந்தைகள் தூங்கும்போது அமைதியாக இருப்பது என்று ஒவ்வொருவரின் தேவைகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.
- குடும்பத்தில் வசதிகளை அனைவரும் பகிர்ந்துகொள்வது போல, வேலைகளையும் பகிர்ந்து செய்ய வேண்டும். குறிப்பிட்ட சிலர் மட்டுமே உழைத்துக்கொண்டே இருந்து, மற்றவர்கள் சொகுசாக வாழ்ந்தால், அந்தக் குடும்பத்தில் உரசல்கள் எழும்.
- ஒருவருக்கு ஏதாவது ஒரு பாதிப்பு ஏற்பட்டால், அந்த உணர்வை மற்ற எல்லோரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஒருவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டால், குடும்பமே சேர்ந்து அவர் நலம்பெற உதவ வேண்டும். ஒருவருக்குப் பண இழப்பு ஏற்பட்டால், தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்றால், என்னவிதமான இழப்பு என்றாலும் குடும்பமே சேர்ந்து அவர் மீள்வதற்கு உதவ வேண்டும்.
- ஒவ்வொரு குடும்பத்துக்கும் சில மரபுகள், நடைமுறைகள், பாரம்பரியங்கள் இருக்கும். பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு அதையெல்லாம் மாறாமல் பின்பற்றுவது குடும்பத்தில் அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்கும்.
- குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட இலக்குகள் இருக்கும். தங்கள் வேலையில் அல்லது தொழிலில் உயர்வு பெறுவது போன்ற நிறைய விஷயங்களில் அவர்களுக்கு இலக்குகள் இருக்கக்கூடும். அதுதவிர, குடும்பத்துக்கு என்று பொதுவான இலக்குகள் சில இருக்கும். புதிய வீடு வாங்குவது, கார் வாங்குவது போன்றவை இப்படிப்பட்ட பொது இலக்குகள். குடும்பத்தினர் அனைவரும் இப்படிப்பட்ட பொது இலக்குகளுக்காக இணைந்து உழைக்க வேண்டும்.
- ஒரு குடும்பத்தினர் எல்லோருக்கும் பாதுகாப்பான சூழல் அந்த வீட்டில் நிலவ வேண்டும். குறிப்பாக முதியோர்களுக்கும் குழந்தைகளுக்கும் உகந்த சூழலை மற்றவர்கள் இணைந்து அமைத்துக் கொடுக்க வேண்டும்.
- ஒவ்வொருவரும் தங்களின் தனிப்பட்ட பொறுப்பில் செய்யும் செயல்களுக்கு மற்றவர்கள் ஒத்துழைப்பாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் அவர்களின் செயல்களுக்கும், அவற்றின் விளைவுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவது கூடாது.
- குடும்பத்தில் எல்லோருக்கும் சமமான மதிப்புக் கொடுத்து நடத்த வேண்டும். குழந்தைகளின் பேச்சைப் புறக்கணிக்கவும் கூடாது, முதியோரின் கருத்துகளை அலட்சியம் செய்யவும் கூடாது.
- இரவு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் குடும்பமாக இணைந்து நேரம் செலவிட வேண்டும். மகிழ்ச்சியுடன் அப்போது நடத்தப்படும் உரையாடல்கள், குடும்பத்தினரிடையே அன்பை வளர்க்கும்.
- எதைப் பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்பதை உணர்ந்துகொண்டு உரையாட வேண்டும். எதையெல்லாம் பேசக்கூடாது என்பதைத் தெரிந்துகொண்டு தவிர்க்க வேண்டும். குழந்தைகளுக்குள் ஏற்படும் சின்னச்சின்ன சச்சரவுகளைத் தீர்க்கும்போது, அவர்களுக்குள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். பெரியவர்களும் தங்களுக்குள் முரண்பாடுகளை வளர்க்கக்கூடாது.



# அடையாளம் தெரியாத அழைப்பு!

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 11 மணிக்கு ஷீலா செல்போனை எடுத்து ஒரு குறிப்பிட்ட எண்ணுக்கு போன் செய்வார். "நித்யாதானே" என்பார். "இல்லையே, நான் கமலா பேசறேன்" என்று அந்த முனையில் சொன்னதும், "சாரி, கை தவறுதலா நம்பரை மாத்தி போட்டுட்டேன்'' என்பார். அடுத்த முனையில் நீண்ட சிரிப்பொலி கேட்கும். ராங் நம்பர் என்றாலும், அதன்பின் அரை மணி நேரம் அவர்கள் உரையாடுவார்கள். அந்த ஒரு வாரத்தில் இவர் வீட்டில் நடந்த சம்பவங்கள், கமலா வீட்டில் நடந்த சம்பவங்கள், நாட்டு நடப்புகள், விலைவாசி, வெயில் என்று ஏதேதோ பேசுவார்கள். அதன்பின் 'குட் பை' சொல்லி போனை வைப்பார் ஷீலா.

ஷீலாவின் மகளுக்கு இது விநோதமாக இருந்தது. அம்மாவுக்கு ஏதேனும் ஞாபகமறதி நோய் வந்துவிட்டதா? எப்படி ஒரே நம்பருக்கு, அது ராங் நம்பர் என்று தெரிந்தும் திரும்பத் திரும்ப அம்மா போன் செய்கிறார்? அந்த ராங் நம்பர் பெண்மணியுடன் ஏன் இவ்வளவு நேரம் பேசுகிறார்? ஒருநாள் கேட்டேவிட்டார். "ஏன்மா, இது நித்யா அத்தை நம்பர் இல்லைன்னு தெரியும். அப்புறம் ஏன் திரும்பத் திரும்பக் கூப்பிட்டுப் பேசறே?"

அப்போதுதான் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததை ஷீலா சொன்னார். தன் உறவினரான நித்யாவுக்கு போன் செய்ய முயன்றபோது தவறுதலாக இந்த எண்ணை அழுத்தியிருக்கிறார். "ராங் நம்பர்'' என்று சொல்லிவிட்டுத் துண்டிக்க முயன்றபோது, "பரவாயில்லை, ஏதாவது பேசுங்க. எனக்கு யாருமே போன் செய்யறதில்லை" என்றிருக்கிறது அந்த முனை. அவர், 85 வயது கமலா. உறவுகள் யாருமின்றித் தனிமையில் வாழும் மூதாட்டி. வீட்டை விட்டு எங்கும் போக முடியாதபடி மூட்டுவலிப் பிரச்னை. தினமும் வந்துபோகும் பணிப்பெண்ணைத் தவிர்த்து வெளியுலகத் தொடர்பே இல்லை. சில நிமிடங்கள் பேசி அவரைப் பற்றி விசாரித்துவிட்டு போனை வைத்தார் ஷீலா. அடுத்த வாரம் அந்த மூதாட்டியின் நினைவு வர, திரும்பவும் போன் செய்து பேச ஆரம்பித்தார். ஒவ்வொரு முறையும் ராங் நம்பர் என்று சொல்லியே உரையாடிக்கொள்கிறார்கள். "இந்த விளையாட்டு அவருக்கும் பிடிச்சிருக்கு" என்றார் ஷீலா.

மறுநாள் ஷீலா திடீரென மாரடைப்பில் இறந்துவிட்டார். தூக்கத்திலேயே மரணம். அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஷீலாவின் போனை எடுத்தார் அவர் மகள். கமலாவின் நம்பரைத் தேடி எடுத்து அம்மா போலவே போன் செய்தார். தன் அம்மாவின் துயர மரணத்தைச் சொல்லி அழுதவர், அதன்பின் ஒவ்வொரு ஞாயிறும் பேசுவதை வழக்கமாக்கிக் கொண்டுவிட்டார்.

உடற்பயிற்சி செய்தால் உடல் வலிமை பெறுவதைப் போல, கனிவுடன் உதவிகள் செய்தால் மனம் வலிமை அடையும். அன்பாகப் பேசுங்கள், எவரையும் மரியாதையாக நடத்துங்கள். அடுத்தவர்களின் தவறுகளை மன்னிக்கவும், நம் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்கவும் பழகுங்கள். பிறரைப் பாராட்டவும் உற்சாகப்படுத்தவும் எப்போதும் தயாராக இருங்கள். அடுத்தவர்களின் வெற்றிகளில் சந்தோஷப்படுங்கள். முகம் தெரியாத புதுமனிதர்களுக்கும் உதவும் உள்ளம் பெறுங்கள். உங்கள் வாழ்க்கையை உச்சபட்ச மகிழ்ச்சியுடன் வாழ்வீர்கள்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL




SUKRA SUPER FINE COTTON VESTS | ROMEX SUPERIOR BANIANS | RISE-UP | ACOSTE LUXURY INNERWEARS | Breeze Eye Let Vests | WinStripe | ARCHERY GYM VEST | COMPACT | LITTLE STARS KIDS INNERWEARS

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-05-2026. Posted at Tirupur BPC on 5th of every month.

